

# உஷ்

சட்டப்படி பார்த்தால் தேசபந்துதான் தற்போதைய பொலிஸ் மா அதிபர் பதவியில் இருக்கிறார்.

இப்போது வேலைகளை செய்யும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பொலிஸ் மா அதிபர் பதவியை ஏற்கவேண்டுமானால் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் விசேட பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றி பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடத்துக்கு புதியவரை அல்லது இப்போதுள்ளவர் தொடர இடமளிக்கப்படவேண்டும்.

அப்படிச் செய்வது தொடர்பில் ஆலோசிக்கிறதாம் அரச மேல்மட்டம்.




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 196 குரோதி வருடம், பங்குனி மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை (24.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 23, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12


## கமெண்ட் கந்தர்...



வீட்டில தங்காமல் 20 நாட்கள் ஒளிஞ்சு திரிந்தவருக்கு வீட்டிலே இருந்து சாப்பாடு கேட்குதாம்...

## தமிழ்த் துறையில் பட்டம் பெற்ற இந்திரானந்த தேரர்



புஃ.கஜிந்தன்

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பயின்று பௌத்த தேரர் ஒருவர் பட்டம் பெற்றுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 39ஆவது பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றன. » 02 பக்கம்

## ஜம்மு – காஷ்மீரில் முத்தையா முரளிதரனுக்கு ஒதுக்கப்பட்ட நிலம்

### சர்ச்சையை ஏற்படுத்தியது ஏன்?



பக்கம் 04

## காஸா மீதான தாக்குதலை தீவிரப்படுத்திய இஸ்ரேல்

### இதுவரை 50,021 பலஸ்தீனர்கள் பலி



பக்கம் 10



## குத்துச் சண்டை ஜாம்பவான் ஜோர்ஜ் மரணம்

பக்கம் 12

## வீட்டிலிருந்து உணவு தேவை!

### அடம்பிடித்த தேசபந்து



தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள, இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் வீட்டிலிருந்து உணவு வழங்கப்படவேண்டுமெனக் கோரியுள்ளார். » 02 பக்கம்

## ‘ஹெப்பி பேர்த்டே’ ரணில்



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் 76ஆவது பிறந்த தினம் இன்றாகும். அவரின் பிறந்த தினத்தையொட்டி இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong நேற்று முன்தினம் (22) இராப்போசன விருந்துபசாரமொன்றை வழங்கினார்.

## மாணவர்களுக்கு மன உளைச்சல்!

### புத்தகப்பை எடையே காரணம் வைத்தியர் சமல் தகவல்





» 02பக்கம்

### நிராகரிக்கப்பட்டவேட்புமனுக்கள்

# நீதியை வழங்குக!

## தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிய அரசியல் கட்சிகள்


சிறு குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழு தலையிட்டு தீர்வு காணவேண்டுமென்று அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் நேற்று (23) கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் நேற்றுத் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இந்தப் பிரச்சினைகளை நீதிமன்றத்துக்குச் செல்லாமல் தீர்க்க... » 02 பக்கம்




## வேட்புமனு நிராகரிப்பு: உயர்நீதிமன்றில் வழக்கு

### சங்கு, மான் கட்சிகள் முடிவு



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கெதிராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படுமென இரண்டு கட்சி வட்டாரங்களும் தெரிவித்தன. » 02 பக்கம்

## யோஷித குழாம் இரவு விடுதியில் கைகலப்பு



» 02 பக்கம்

## தேர்தல் காலத்தில் விசேட பாதுகாப்பு

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



‘‘எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் வன்முறைச் சம்பவங்களைக் குறைப்பதற்கும் அதிகாரிகள் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தி வருகின்றனர்’’ - என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப் படவுள்ள விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததோடு, இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

‘‘பொலிஸாரின் தேர்தல் பிரிவு, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் நாடு தழுவிய வன்முறை நடவடிக்கைகள்... » 02 பக்கம்

## பேஸ்புக் களியாட்டம் சீதுவயில் 76 பேர் கைது



» 02 பக்கம்

## மருத்துவ சான்றிதழை தருவதாக இலஞ்சம் பெற்ற மூவர் கைது



ஆயுர்வேத மருத்துவ சபையிடமிருந்து பாரம்பரிய மருத்துவச் சான்றிதழைப் பெற்றுத் தருவதற்காக ரூ. 5,00, 000 இலஞ்சம் பெற முயன்றதாகத் தொழிலதிபர் மற்றும் அரசு சாரா நிறுவன ஒருங்கிணைப்பாளர் உட்பட மூவரை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளது. » 02 பக்கம்




# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் கடமையாற்றிய நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு





*பு.கஜிந்தன்*

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது கடமையாற்றிய நெடுந்தீவு பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (21) அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் கௌரவிக்கப்பட்டார்கள்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர், கடல்வழி போக்குவரத்து ஊடாக மேற்கொள்ளப்பட்ட திருவிழா ஒழுங்கமைப்புக்கும் அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய நெடுந்தீவு பிரேதச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்துகின்ற செயற்பாடாக இது அமையும் எனவும் அந்தவகையில் நெடுந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு தமது நன்றியினைத் தெரிவித்தார். இச் சந்தர்ப்பத்தில் கடற்படையினரின் ஒத்துழைப்பு சிறப்பாக அமைந்திருந்ததனையும் குறிப்பிட்டதுடன், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு பிரதேச சபையினர், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், போக்குவரத்து மற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்கும் தமது நன்றியினைத் தெரிவித்தார்.

மேலும், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், உதவி மாவட்டச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்புக்கும் தமது நன்றியினை அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க அதிபர் அலுவலர்களினால் மெச்சுரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# விளையாட்டுக் கழகத்தினருடன் சிறிதரன் எம்.பி. சந்திப்பு!



கண்டாவளை ரூபன் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறிதரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (22) கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது, கழக வீரர்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்துகொண்டதுடன், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற கலாசார சங்கமம் நிகழ்வு-2025

*ஜோசப் நயன்*



ஓரங்கட்டப்பட்டு மருவி வரும் கலைஞர்களை வெளிக்கொணரும் "எங்கள் குரல்" எனும் தொனிப்பொருளில் மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடுசெய்த கலாசார சங்கமம் நிகழ்வு-2025 நேற்று முன்தினம் (22) காலை 10 மணிமுதல் மதியம் 01 மணிவரை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மன்னார் மாவட்ட சிரேஷ்ட திட்ட அலுவலர் ஜெபநாதன் டலிமா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

அருகி வரும் கலைகள் மற்றும் ஓரங்கட்டப்பட்டு வருகின்ற சிறுவர்கள் மற்றும் அவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மரபு ரீதியாக வந்த பாரம்பரிய கலைகளான நாட்டு கூத்து, நாட்டார் பாடல்கள், வில்லுப்பாட்டு, கும்மி நடனம் போன்ற பாரம்பரிய கலை நிகழ்வுகள் சிறுவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டதோடு சிறுவர்களின் ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வந்தனர்.

மேலும் எதிர்வரும் காலங்களில் இளைய தலைமுறையினர் பங்குகொள்ளும் நோக்குடன் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தேசிய கலைஞர் எஸ்.ஏ.உதயன் கலந்துகொண்டதோடு, சிறுவர்கள் மற்றும் பெற்றோரும் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ஜப்பான் அரசின் நிதி உதவியில் உபகரணங்கள்

*சாவகச்சேரி நிருபர்*

மன்னாரில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் UNWOMEN மற்றும் Chrysalis நிறுவனங்கள் ஊடாக வியாபார விருத்திக்கான உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை (21) வழங்கப்பட்டிருந்தன.



பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் முயற்சியாண்மையை மேம்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் மன்னார் மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான உதவி திட்டம் வழங்கும் மேற்படி நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜப்பான் தூதரகத்தின் அமைச்சர் மற்றும் பிரதி பிரதானி கமோஷிடா (Mr.Kamoshida, Minister / Deputy head of mission embassy of Japan to Sri Lanka) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் உள்ளடங்களாக பிரதேச செயலாளர்கள், UN WOMEN மற்றும் Chrysalis அமைப்பின் அதிகாரிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வியாபார விருத்தி தொடர்பான பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களினால் தயாரிக்கப்பட்ட பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்கள் (உணவு, கலைப்பொருட்கள், ஆடை வகைகள்) என்பன காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனை சந்தையும் இடம்பெற்றது.

அதேநேரம் பெண்களின் வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான பல்வேறு தொழில் விருத்திக்கான உபகரணங்கள் (தையல் இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி, dehydrator போன்றவை வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை காலங்களிலும் அலறும் ஒலிபெருக்கிகள்; மாணவர்கள் அசௌகரியம் - பொலிஸார் கவனயீனம்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரான்பற்று வைரவர் ஆலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பித்த நாள்முதல் ஆறு நாட்களாக ஒலிபெருக்கிகளின் ஒலியால் பரீட்சையை எதிர்கொண்டுள்ள மாணவர்களும் பொதுமக்களும் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக அன்றைய பாடத்தை இறுதி மீட்டல்செய்யும் நேரமான காலை 6.15 மணி தொடக்கம் ஒலிபெருக்கிமூலம் விளம்பரம் என்ற பெயரில் மக்களால் சகிக்கமுடியாத மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடிய ஒலியெழுப்பப்படுவதால் மக்களும் மாணவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய பரீட்சை காலங்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தமுடியாது எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், அம் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. பல இடங்களில் குறிப்பாக இளவாலை பொலிஸ் பிரிவிலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலும் இக்கட்டுப்பாடுகள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.



பரீட்சை தவிர்ந்த காலங்களிலும் ஆகக்கூடியது நான்கு ஒலிபெருக்கிகள் மட்டும்தான் பாவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதுவும் 1980ஆம் ஆண்டு, 924/12ஆம் இலக்க சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சத்தத்தின் எல்லை (Noise Level) பகல் நேரத்தில் 55 dB எல்லையை தாண்டாமலும் இரவு நேரத்தில் 45 dB எல்லையை தாண்டாமலும் இருக்கவேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இதனையும் மீறி இவ்வாலயத்தில் ஆறு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு அதிக ஒலியெழுப்பப்படுவது இளவாலை பொலிஸாரினதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினதும் அசண்டையீனத்தையே புலப்படுத்துகின்றது.

புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட அண்மைக்காலங்களிலும் இதே பிரிவில் சில வணக்கஸ்தலங்களில் இவ்வாறான சட்ட மீறல்களை பொதுமக்கள் பொலிஸாருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளினாலும் ஒலிபெருக்கிகள் குறித்த கட்டுப்பாடுகளும் அவை தொடர்பில் பொதுமக்கள் அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்களும் அந்தந்த பிரதேச செயலர்களால் செயலகங்களின் உத்தியோகபூர்வ முகநூல்கள் மூலமும் சுவரொட்டிகள் மூலமும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டபோதும் யாழ். மாவட்டத்தில் ஒலிபெருக்கியால் பெரிதும் பாதிக்கப்படும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அவ்வாறு எவையும் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படவில்லை. அரச அதிபர் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மாணவர்களுக்கு...

பாடசாலைகளுக்குக் கொண்டுச் செல்லும் புத்தகப்பைகளின் எடை அதிகரிப்பால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல உடல்நலப் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து அவ்வப்போது விவாதங்கள் நடத்தப்பட்டாலும் சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் இதுவரையும் எவ்வித உரிய தீர்வினை காணவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

**விரைவில் தீர்வு...**

புத்தகப்பைகளின் எடை அதிகரிப்பு காரணமாக, பாடசாலை மாணவர்களிடையே முதுகுத்தண்டு பிரச்சினை, சமநிலைப்பிரச்சினை, தலைவலி மற்றும் கழுத்து வலி உள்ளிட்ட பிரச்சினைகள், நரம்பு தொடர்பான கோளாறுகள் உள்ளிட்டவை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த பிரச்சினை தொடர்பில் விரைவில் உரிய தீர்வினை எடுக்க வேண்டும் என்றும் தரப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் பாடசாலை புத்தகப் பையொன்றை வடிவமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஒரு நாளைக்கு பாடசாலைக்கு எடுத்துச்செல்ல வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ கேட்டுக்கொண்டுள்ளார்.

## வேட்புமனு நிராகரிப்பு:...

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணமும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் நிசாம் காரியப்பரும் முன்னிலையாகவுள்ளனர்.

## வீட்டிலிருந்து...

அவரின் கோரிக்கையை பரிசீலனை செய்வதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க கருத்து வெளியிடுகையில்,

''தென்னக்கோன் தனது இல்லத்திலிருந்து உணவு கொண்டு வருவதற்கு முறையாக அனுமதி கோரியுள்ளார். இந்நிலையில், அவரது கோரிக்கையை ஆதரிப்பதற்கான சரியான காரணங்களை வழங்குமாறு திணைக்களம் அவரை அறிவுறுத்தியுள்ளது. இதற்கான தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், சிறை அதிகாரிகள் அவருக்கு வீட்டிலிருந்து உணவைப் பெற அனுமதிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள்'' என்று திசாநாயக்க கூறியுள்ளார்.

முன்னதாக, வெலிகமவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த தென்னக்கோனுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், பிறப்பிக்கப்பட்ட 20 நாட்களுக்குப் பின்னர் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில், அவரை எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டு, தற்போது தும்பர சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலஞ்சம் பெற்ற...

பனாமுரவைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் செய்த முறைப்பாட்டின்பேரில், ஆயுர்வேத மருத்துவ சபை ஆணையாளரின் ஒப்புதலுடன் சான்றிதழை வழங்குவதற்காக ரூ. 01மில்லியன் கோரினார்கள் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

களனியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர், பிலிமத்தலாவையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மற்றும் நாவலப்பிட்டியைச் சேர்ந்த அரசு சாரா நிறுவன ஒருங்கிணைப்பாளர் என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்கள் மூவரே சனிக் கிழமையன்று (22) கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இலஞ்சம் பெற முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் சந்தேகநபர்கள் மூவரும் இன்று கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## தமிழ்த் துறையில்...

இதில் முதலாவது அமர்வின்போது சன்னாஸ்கம இந்திரானந்த தேரர் என்ற பௌத்த தேரரே இந்தப் பட்டம் பெற்றுள்ளார்.

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்ட தமிழில் பட்டப்பின் தகைமைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து அவர் இந்தப் பட்டம் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீ சற்குணராஜாவினால் சம்பிரதாய பூர்வமாக இவரது பட்டம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் காலத்தில்...

குறித்த அறிக்கைகளை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

அனைத்துச் சம்பவங்களும் பதிவு செய்யப்படுகின்றன. எந்தவொரு மீறல்களுக்கும் எதிராக நாங்கள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறோம். தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது சிறப்பு முன்னெச்சரிக்கைகள் செயற்படுத்தப்பட்டன.

தற்போது, வழக்கமான பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் நாள் நெருங்கும்போது பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புக்கான பொலிஸ் குழுக்களை கடமையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளோம். கொழும்பில் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதை மேற்பார்வையிடுவது உட்பட தேர்தல் நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் பணியை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள்.

தேர்தல் காலத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களைக் குறைப்பதற்காக, பொலிஸாரின் சிறப்புப்படை மற்றும் முப்படை வீரர்கள் போன்ற சிறப்புப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன'' என்றார்.

## பேஸ்புக் களியாட்டம்...

பேஸ்புக் விருந்துபசாரம் இடம்பெற்ற இடம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு, 15 இளம் பெண்கள் உட்பட 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீதுவ பொலிஸ் பிரிவின் கிந்திகொட பெல்லனவத்த பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றுமுன்தினம் (22) இரவு இந்தக் குழு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விருந்தில் கலந்துகொண்ட இளைஞர்களும் யுவதிகளும் ஐஸ் மற்றும் கஞ்சாவைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள், கேரள கஞ்சா மற்றும் சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகளை வைத்திருந்ததற்காக 03 பெண்களும் 14 ஆண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். மேலும், இந்த விருந்தில் பங்கேற்றிருந்த 12 இளம் பெண்களும் 47 இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18 முதல் 25 வயதுக்குட்பட்ட கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் வசிப்பவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ள அதேவேளை, சீதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யோஷித குழாம்

கொழும்பு - கொம்பனித்தெருவில் உள்ள இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட மோதலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவுடன் வந்த சந்தேகநபர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள விடுதிக்குச் சென்ற யோஷித ராஜபக்ஷ, அவரது மனைவி உள்ளிட்ட குழுவினர் குழப்பம் விளைவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை யோஷித தரப்பு ஏற்க மறுத்தமையினால் முறுகல்நிலை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், யோஷித ராஜபக்ஷவுடன் வந்த ஒரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் சந்தேக நபர்கள் தெஹிவளை, அத்திடிய மற்றும் திம்பிரிகஸ்யாய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் தற்போது அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுவிட்டதாகவும் மேலும், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நிராகரிக்கப்பட்ட...

முடிந்தால் அது மிகவும் வசதியாக இருக்கும் என்றும் கட்சிச் செயலாளர்கள் கூறியுள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின்போது பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் மற்றும் அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்கள் குறித்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் இந்த விரிவான தகவல்களை வழங்கியதாகவும் அறியப்படுகிறது.

மே 06ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பல அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்கள் பல்வேறு காரணங்களுக்காக தேர்தல் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட பல கட்சிகள் நீதிமன்றத்துக்கு செல்ல ஆலோசித்துவரும் நிலையில் நேற்று இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.





# ஜம்மு - காஷ்மீரில் முத்தையா முரளிதரனுக்கு ஒதுக்கப்பட்ட நிலம்

## சர்ச்சையை ஏற்படுத்தியது ஏன்?

சிலோன் பீவரேஜஸ் நிறுவனத்துக்கு 25.75 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் மூன்று பேரில் முத்தையா முரளிதரனும் ஒருவர். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியது ஏன், இந்த நிலத்தின் நிலை என்ன? என்பது குறித்து இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

ஜம்மு - காஷ்மீர் சட்டப் பேரவையில் கதுவா மாவட்டத்தில் இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுக்கு நிலம் இலவசமாக ஒதுக்கப்பட்டது எனக் கூறி அண்மையில் சலசலப்பு ஏற்பட்டது. பாராளுமன்றத்தில் இதற்குப் பதிலளித்த வருவாய்த்துறை அமைச்சர் ஜாவேத் அஹ்மத் தார், இந்த விவகாரம் குறித்து தனக்குத் தெரியாதென்றும் அது குறித்து பரிசீலிப்பதாகவும் கூறினார்.

### முரளிதரனுக்கு நிலம் ஒதுக்கியதில் என்ன சர்ச்சை?

குல்காமிலிருந்து ஐந்து தடவைகள் சி.பி.ஐ.(எம்) எம்.எல்.ஏயாக இருந்த எம்.வை.தாரிகாமி, முரளிதரனின் பெயரைக் குறிப்பிடாமல் சட்டசபையில், ''இலங்கை கிரிக்கெட் வீரருக்கு ஜம்மு காஷ்மீரில் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமரின் ஆவாஸ் யோஜனா (பி.எம்.ஏ.) திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட உள்ளூர் மக்களுக்கு நிலம் கிடைக்காத நிலையில் இது எப்படிச் செய்யப்பட்டது?" என்றும் கேட்டார்.

அவருடன், மூன்று தடவைகள் காங்கிரஸ் எம்.எல்.ஏவாக இருந்த தூரு ஜி.ஏ.மிர், ஜம்மு காஷ்மீரில் இந்திய கிரிக்கெட் வீரர் அல்லாத ஒருவருக்கு எப்படி நிலம் ஒதுக்கப்பட்டதென்று அரசாங்கத்திடம் கேட்டார். இது ஒரு "தீவிரமான பிரச்சினை" - என்று கூறினார். இந்த இடம் கதுவா மாவட்டத்தின் பாக்தாலி தொழிற்பேட்டையில் உள்ளது.

### ஜம்மு - காஷ்மீர் தொழில்துறை நில ஒதுக்கீட்டுக் கொள்கை 2021-30இன் கீழ் நிலத்துக்கு யார் தகுதியானவர்?

குறிப்பிட்ட சட்டங்களின் நிலத்துக்கு தகுதியானவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இந்திய பார்ட்னர்ஷிப் சட்டம், 1932 அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மைச் சட்டம், 2008 அல்லது கோர்ப்பரேட் நிறுவனம் சட்டம் போன்றவற்றின் மூலம் குறிப்பிட்ட தனி நபர்கள் அல்லது குழுவினர் தகுதியுடையவர்களாகக் கருதப்படுகின்றனர்.

ஒரு தொழில் நிறுவனம்/அலகை நிறுவுவதற்கு நிலம் ஒதுக்கப்படும். மேலும், ஜம்மு காஷ்மீர் அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி விண்ணப்பிக்க வேண்டும்.

### முரளிதரனுக்கு நிலம் ஒதுக்கப்பட்டதா?

முத்தையா முரளிதரன் என்ற தனி நபருக்கு அல்லாமல் சிலோன் பீவரேஜஸ் நிறுவனத்துக்கு மொத்தம் 206 கனல்கள் (25.75 ஏக்கர்) நிலம், ஜம்மு காஷ்மீர் ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கோர்ப்பரேஷன் (சிட்கோ) மூலம் ஜூன் 1, 2024 அன்று ஒதுக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் மூன்று பேரில் முத்தையா முரளிதரனும் ஒருவர்.

சிலோன் பீவரேஜஸ், ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 2023ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி சென்னையில் உள்ள நிறுவனங்களின் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டது. மற்ற இரண்டு இயக்குநர்களான நித்யா ராமமூர்த்தி மற்றும் முத்தையா சசிதரன், ஆகியோரின் பெயர்கள் முறையே நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுப் பட்டியலில் வரிசை எண் 01 மற்றும் 03 இல் உள்ளன.

### நிலம் இலவசமாக வழங்கப்பட்டதா?

ரூ. 16.48 கோடியை முழுமையாக இந்நிறுவனம் செலுத்திய பின்னரே, ஜூன் 16, 2024 அன்று குத்தகைப் பத்திரத்தை சிட்கோ நிறுவனம் நிறைவேற்றியது.

இந்த நிறுவனம், அலுமினிய கேன்கள் மற்றும் பொலித்தீன் டெரெப்தாலேட்களை போத்தல்களில் நிரப்புவதற்கான ஒரு யூனிட்டை நிறுவ இருந்தது. 950 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு மற்றும் ரூ. 1642.75 கோடி முதலீடு நேரடியாக முன்மொழியப்பட்டது.

மார்ச் 15, 2024 அன்று உச்ச நிலை நில ஒதுக்கீட்டுக் குழு, தகுதிப் பட்டியலின் அடிப்படையில் நிலத்தை ஒதுக்குவதற்கு ஒப்புதல் அளித்தது. மேலும், ஆட்சேபனைகள் இருந்தால் தெரிவிக்குமாறு பொதுவெளியில் அழைப்பு விடுக்கப்பட்டது.

### தகுதிப் பட்டியல் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது?

ஒரு கனலுக்கு முன்மொழியப்பட்ட முதலீட்டின் அடிப்படையில் ஒரு கனலுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் ஆலையின் சாத்தியக்கூறுகளுடன் தகுதிப் பட்டியல் தீர்மானிக்கப்பட்டது.

பரிசோதிக்கப்பட்ட 22 விண்ணப்பதாரர்களில் சிலோன் பீவரேஜஸ், தகுதி வரிசையில் முதலிடம் பிடித்தது. ஒரு கனல் ஒன்றுக்கு ரூ. 7.975 கோடி முதலீடு மற்றும் கனல் ஒன்றுக்கு 4.612 பணியாளர்கள் வேலை வாய்ப்பை அது முன்மொழிகிறது.

### ஜம்மு - காஷ்மீர் தொழில் கொள்கை என்றால் என்ன?

ஜம்மு - காஷ்மீரில் தொழில்துறையை மேம்படுத்தவும் வேலைகளை உருவாக்கவும் மொத்தம் ரூ. 28,400 கோடி செலவில் புதிய தொழில் மேம்பாட்டுத் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் மூலதன முதலீட்டில் மானியம், ஆலை மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கு ஜி.எஸ்.டி. மற்றும் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக செயற்படும் மூலதனம் போன்ற சலுகைகளை வழங்கியது.

இந்தச் சலுகைகளைப் பெற, தொழில் முனைவோர் முதலில் சிட்கோவிடமிருந்து நிலத்தை ஒதுக்கி, அதன்பின் தொழில்துறை பிரிவை அமைக்க வேண்டும். சுமார் 4.5 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும் நோக்கில் இந்தக் கொள்கை மேற்கொள்ளப்பட்டது.



### நிதிச் சலுகைகளுக்கு யாரெல்லாம் எப்போதிருந்து தகுதி பெற்றவர்கள்?

ஏப்ரல் 01, 2021 அன்று அல்லது அதற்குப் பிறகு, நிலம் ஒதுக்கப்பட்ட பின்னர் தொழில்துறையில் பதிவு செய்த தொழில்முனைவோருக்கு மட்டுமே இந்த சலுகைகள் கிடைக்கும்.

ஊக்கத்தொகை அவர்கள் உற்பத்தியைத் தொடங்கிய நாளிலிருந்து அடுத்த 10 ஆண்டுகளில் அவர்களுக்குச் செலுத்தப்படும்.

### சிலோன் பீவரேஜஸ் நிறுவனத்துக்கு ஏதேனும் ஊக்கத்தொகை கிடைத்ததா?

இந்நிறுவனத்துக்கு ஊக்கத் தொகை கிடைக்கவில்லை. ஏனென்றால், ஜூலை 2024இல் நிலம் ஒதுக்கப்பட்ட பிறகு, ஊக்கத்தொகைக்கு தகுதி பெறுவதற்கு நிறுவனம் தன்னைத் தொழில்துறையில் பதிவுசெய்துகொள்ள வேண்டும். இது வெளிநாட்டு முதலீட்டை உள்ளடக்கியதால், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எவ்.டி.ஐ. மீதான வழிகாட்டுதல் கட்டமைப்பின் அடிப்படையில் முதலீடு, ஆர்.பி.ஐ. மற்றும் டி.பி.ஐ.டி.ஐ. மூலம் வர வேண்டும். இதற்கு நிறுவனத்துக்கு நேரம் எடுத்தது. மேலும், 971 தொழிற்றுறை அலகுகள் பதிவுசெய்யப்பட்டதன் மூலம் ரூ. 28,400 கோடி முற்றிலும் தீர்ந்துவிட்டது.



### சிலோன் பீவரேஜஸ் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் நிலை என்ன?

யூனிட்டை பதிவுசெய்வதற்கான விதிமுறைகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதைக் கருத்திற்கொண்டு, மார்ச் 06 அன்று இந்நிறுவனம், ஜம்மு - காஷ்மீர் சிட்கோவிடம் நிலத்தை ஒப்படைத்தது.

ஜம்மு - காஷ்மீர் தொழில்துறை நில ஒதுக்கீட்டுக் கொள்கையின்படி, குத்தகைப் பத்திரத்தை நிறைவேற்றிய இரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு ஒதுக்கீட்டுதாரர் நிலத்தை ஒப்படைத்தால் ஒதுக்கீடு இரத்துச்செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டவருக்கு செலுத்தப்பட்ட தொகையில் 80 சதவீதம் திருப்பித் தரப்படும்.

**(இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படும் பணப்பெறுமதி இந்திய ரூபாவை அடிப்படையாகக் கொண்டது)**

*நன்றி - இந்தியன் எக்ஸ்பிரஸ்*

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 24ஆம் திகதி, திங்கட்கிழமை

# ஆட்சியாளரின் இரட்டைவேடம்!

''காஸாவின் நிலைமை குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மேலும் நிலைமையை மோசமாக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தவிர்க்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது. விரைவில் இப்பகுதியில் நிலையான அமைதி நிலைநாட்டப்படுமென்று நாங்கள் நம்புகிறோம்'' - இது காஸாவில் இஸ்ரேல் மீண்டும் அரங்கேற்றிவரும் மனித சங்காரத்தையொட்டி இலங்கை வெளியிட்டுள்ள அறிக்கை. பாம்பும் இறக்காமல் தடிக்கும் நோகாமல் என்ற கூற்றுப்படி ஒப்புக்கு சப்பாணி கட்டியிருக்கிறது அரசு.

இலங்கையிடமிருந்து இதனைவிட பெரிதாக வேறு எதனையும் எதிர்பார்த்துவிட முடியாது. இலங்கையில் இடம்பெற்ற மனித படுகொலைகள் தொடர்பில் பரிந்து பேசிவந்த இன்றைய ஆட்சியாளர்கள், உள்நாட்டுப் பொறிமுறைமூலம் உண்மைகள் ஆராயப்பட வேண்டுமென அந்தர்பல்டி அடிக்கும்போதே ஆட்சியின் வண்டவாளம் தெரிந்தது. தமது கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீர அரச இயந்திர உத்தரவால் கொல்லப்பட்டமை தொடர்பில் கூட அது குறித்தான விசாரணைக்கு அக்கறைப்படாத அரசு, காஸாவுக்கு கண்ணீர் வடிக்குமென எதிர்பார்ப்பது மடமைத்தனம் தான்.

மேற்காசியாவில் மீண்டும் இரத்த ஆறு ஓடத் தொடங்கியிருக்கிறது. காஸா உள்ளிட்ட பலஸ்தீனப் பகுதியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்த ஹமாஸ் இயக்கத்தினருடன் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் தன்னிச்சையாக மீறியிருக்கிறது. ஹமாஸ் இயக்கத்தினரைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறினாலும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் என்பதை உலகறியும்.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது நவீன வரலாற்றில் மிகப் பெரிய நாசத்தை ஏற்படுத்திய போர் முடிவுக்கு வரும், அமைதி ஏற்படுமென்று உலகம் எதிர்பார்த்தது. காஸாவின் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கான முயற்சி முறியடிக்கப்பட்டு அந்தப் பகுதி முழுவதும் அப்பாவி உயிர்களின் இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருக்கிறது. இது எதிர்பாராத திருப்பம்.

அமெரிக்காவின் தலைமையில் கட்டாரும் எகிப்தும் இணைந்து நடந்துவரும் அமைதிப் பேச்சுவார்த்தை முடிவுக்கு வரவிருந்தநிலையில், இஸ்ரேல் நடத்தியிருக்கும் தாக்குதலும் உயிர்க்கொலையும் முட்டுக்கட்டை போட்டிருக்கின்றன. தெற்கு காஸாவிலிருந்து வடக்கு காஸா வரையில் வீடுகள், அகதி முகாம்கள் என்று விட்டுவைக்காமல் வெடிகுண்டு வீச்சு நடைபெறுகிறது.

அதிகாரபூர்வமாக உயிரிழப்புகள் குறித்தும் சேதங்கள் குறித்தும் துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையென்றாலும் எதிர்பாராமல் நடத்தப்பட்ட தாக்குதலென்பதால் பேரழிவு ஏற்பட்டிருக்குமென்பதில் சந்தேகம் இல்லை. காஸாவுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கடந்த இரண்டு வாரங்களாகவே இஸ்ரேல் தடுத்திருக்கிறது. இஸ்ரேல் இராணுவம் மீண்டும் காஸாவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

போர்நிறுத்த காலத்தின் பணயக் கைதிகள் அனைவரையும் விட்டுவிட வேண்டுமென்றும் முழுமையாகப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருந்தது. அந்த ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறது. ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளை விடுவிப்பதில் தயக்கம் காட்டியதால்தான் இராணுவத் தாக்குதலுக்கு உத்தரவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறியுள்ளார். அப்படிச் சொன்னாலும் கூட அவர் அமைதிவிரும்பி என்பதை இந்த உலகு நம்பாது. மீண்டும் தாக்குதல் இப்போதுதான் தொடங்கியிருக்கிறதென்று அவர் கூறுவதன் மூலம் தொடர்ந்து தாக்குதல் நடத்த இஸ்ரேல் முற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.


உயிரோடிருக்கும் பணயக் கைதிகளையும் ஹமாஸ் அமைப்பினர் கொலை செய்ய இஸ்ரேல் பிரதமர் தூண்டுகிறார் என்பதாகவே நிலைமை இருக்கிறது. மீண்டும் போர் தொடங்கியிருப்பதில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவுக்கு எதிராக இஸ்ரேலிலும் கடுமையான எதிர்ப்பு காணப்படுகிறது. எதிர்க்கட்சி கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளது.

ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காஸாவில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் காஸா மீண்டும் செல்வதையும் அந்தப் பகுதி அவர்களது நிர்வாகத்தின் கீழ் இருப்பதையும் தடுப்பது தான் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவின் நோக்கமென்று தோன்றுகிறது. ''ஹமாஸை முற்றிலுமாக அழிக்கும்வரை ஓயமாட்டேன்''- என்கிற பிரதமர் நெதன்யாஹுவின் முனைப்பின் நோக்கம் காஸாவிலிருந்து பலஸ்தீனர்களை முற்றிலுமாக அகற்றுவது அல்லது அழிப்பது என்பதாகத்தான் தோன்றுகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா துணை நிற்கிறது என்கிற ஹமாஸின் குற்றச்சாட்டையும் முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட முடியாது.

பலஸ்தீனர்களை காஸாவிலிருந்து முற்றிலுமாக அகற்றி அவர்களுக்கு போர்ச்சூழல் இல்லாத சமாதான வாழ்க்கையை அளிப்பதும் அந்தப் பகுதியை சூதாட்டக் கேளிக்கை நகரமாக மாற்றுவதென்பதும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்த மாற்றுத்திட்டம். அதைக் கேட்டு ஒட்டுமொத்த உலகமும் அதிர்ந்தது. மேற்காசியாவில் பரவலாக எதிர்ப்புக் கிளம்பியது. இஸ்ரேலின் இப்போதைய தாக்குதல்களைப் பார்க்கும்போது பிரதமர் நெதன்யாஹு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் கனவை நனவாக்க உதவுகிறாரோ என்கிற நியாயமான ஐயப்பாடு எழுகிறது.

காஸாவில் அமைதி மீட்டெடுக்கப்பட வேண்டுமென்று ஒட்டுமொத்த உலகமும் பிரார்த்திக்கிறது. அதேசமயம், கொடுங்கோலனாக நடந்துகொள்ளும் இஸ்ரேல் பிரதமரின் இந்த அகங்காரத்தை அமைதியை விரும்பும் நாடுகள் கண்டித்துக்கொண்டிருக்கும் நிலையில், இலங்கை அதனைக் கண்டுகொள்ளாமல் பூசி மெழுகுவது நல்லதல்ல.

இந்நாட்டின் பெரும்பாலான முஸ்லிம்கள் ஆதரித்த கட்சியென்று பாராளுமன்றத்தில் மார்தட்டும் தேசிய மக்கள் சக்தி, காஸாவில் அப்பட்டமாக அரங்கேறும் மனிதப்படுகொலைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதன் மூலம் தனது இரட்டைவேடத்தைப் பறைசாற்றி நிற்கிறது. இது நியாயமும் தர்மமும் அல்ல.



# வார்த்தை வன்முறை!

- வெ. இன்சுவை -

பூவுக்கும் இரண்டு பெண்களுக்கும் ஏதோ தகராறு. இருவரும் மாறிமாறித் திட்டிக் கொண்டார்கள். சண்டை என்னவோ இவர்கள் இருவரிடையே தான். ஆனால், தேவையே இல்லாமல் இருவரும் அடுத்தவரின் குடும்ப உறுப்பினர்களைப் பற்றி மிகவும் அசிங்கமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். அவர்களைக் கடந்து சென்றவர்கள் முகம் சுளித்துக்கொண்டே சென்றார்கள்.

ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு. படித்த மேல்தட்டு மக்கள் வசிக்கும் குடியிருப்பு. எதற்காகவோ இரண்டு பெண்களுக்குள் பிரச்சினை. அங்கும் வார்த்தைகள் வரம்பு மீற ஆரம்பித்து, தடித்த சொற்கள் விழ ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் அந்த வீட்டு ஆண்களும் சேர்ந்துகொள்ள காதுகூசும் அளவுக்கு வசவுகள். இங்கே கொஞ்சம் ஆங்கிலம், மீதி தமிழ். மற்றபடி அந்தப் படிக்காத பெண்களுக்கும் இவர்களுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது.

கோபம் வந்தால் எல்லா மனிதர்களும் தன்னிலை மறந்து போகிறார்கள். இதுவே வாய்மொழி வன்முறை என்பதாகும். வன்முறையென்றால் என்ன? மனிதர்களால் உடல் ரீதியான பலத்தையோ அல்லது சக்தியையோ பயன்படுத்தி பிற உயிரினங்களுக்கு தீங்கு விளைவிப்பதையும் அவமானம், வலி, காயம், இயலாமை, சொத்துகளுக்கு சேதம் மற்றும் மரணத்தை ஏற்படுத்துவது, ஒரு சமுதாயத்தின் வாழும் சூழலுக்கு அழிவை ஏற்படுத்துவது ஆகியவையே வன்முறையென வரையறுக்கப்படுகிறது. ஒருவரை அடித்துத் துவைப்பது மட்டுமே வன்முறை அல்ல. கத்தியால் குத்திக் கொல்வதோ, துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதோ, வெடிகுண்டு வீசிக் கூண்டோடு அழிப்பதோ மட்டும் வன்முறை என்று கட்டம் போட்டுவிடக் கூடாது.

வாய்மொழி வன்முறையும் பலருக்கு மிகப்பெரிய மனக் காயத்தை ஏற்படுத்தும். மற்றவர் முன்னிலையில் கேலி செய்வது, மட்டந்தட்டிப் பேசுவது, அவர் பேச விரும்பாத விஷயத்தைப் பேசுவது, குத்திக்காட்டிப் பேசுவது, அவமானப்படுத்தும் நோக்கில் பேசுவது, அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்துவது ஆகிய அனைத்தும் வன்முறையே.

ஒருவருடைய இனம், நிறம், வயது, தோற்றம், இயலாமை, மொழி, மதம், நம்பிக்கை, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் இழிவாகப் பேசினால் அது குற்றம்.

வார்த்தை என்பது ஒலிகளின் ஓசை மட்டுமா? அது எழுத்துகளின் சேர்க்கை. வார்த்தைகள் என்பது சொற்களின் கோர்வை. ஆகவே, சொற்களைக் கோர்க்கும்போது நம் சொற்களில் கவனமிருக்க வேண்டும். மனிதர்களின் நாக்கு கத்தியைவிடக் கூர்மையானது. மோசமான நாக்கு ஒருவரின் நம்பிக்கையைச் சிதைக்கும்; பெருமையைப் பொசுக்கும்; உள்ளத்தில் ஆறாத ரணத்தை உண்டாக்கும்; பழியைச் சுமத்தும்; புகழைக் கெடுக்கும்; ஊரையே அவருக்கு எதிராகத் திருப்பி, புழுதிவாரி தூற்ற வைக்கும்.

'சிதறாத வார்த்தைகள் சீரான வாழ்க்கையைத் தரும். வாய்தவறி விழும் பேச்சுகள், கைதவறி விழும் கண்ணாடியை விடக் கூர்மையானவை'. ஒருவரிடம் நாம் பேசும்போது நாம் என்ன அர்த்தத்தில் பேசுகிறோம் என்பதைவிட, நாம் கூறுவதைக் கேட்பவர் எந்த அர்த்தத்தில் அதைப் புரிந்துகொள்வார் என்பதைக் கவனித்துப் பேச வேண்டும். ஒரே வார்த்தையில் அதிகபட்ச மகிழ்ச்சியையும் ஒரே வார்த்தையில் கடும் வேதனையையும் தரும் வல்லமை படைத்தது நம் நாக்கு.

நாம் நெருக்கமானவர்களிடம் நம்பிச் சொன்ன வார்த்தைகளை மூன்றாம் மனிதர் வாயால் நாம் கேட்கும்போது அவமானப்படுகிறது நம் நம்பிக்கை. பல சமயம் யோசிக்காமல் கடும் சொற்களை வீசிவிட்டுப் பின்னர் வருந்துகிறோம். மௌனம் பல சண்டைகளைத் தடுக்கும். எந்தச் சூழ்நிலையிலும் நம் சிறந்த பதில் ஒரு புன்னகை. நம்மைத் தவறாகப் புரிந்துகொள்பவர்களிடம் - புறக்கணிப்பவர்களிடம்- புண்படுத்துபவர்களிடமும் அமைதியே நம் பதிலாக இருக்கட்டும். சுமுகமான சூழ்நிலை இல்லாத இடத்தில் நாம் மௌனத்தைக் கடைப்பிடிக்கும்போது சண்டையிடாமல், விவாதிக்காமல், உணர்ச்சிவசப்பட்டு கட்டுப்பாட்டை இழக்காமல் நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். மௌனத்தின் மூலம் நம் எதிர்ப்பைப் பலமாகக் காட்ட முடியும்.

மௌனமும் புன்னகையும்தான் இந்த உலகில் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள். புன்னகை பிரச்சினைகளைத் தீர்க்கும்; மௌனமோ பிரச்சினைகளே வரவிடாமல் தடுக்கும். நம் மௌனத்தைக் கண்டு பயப்படுவார்கள். நாம் ஆழமாகக் காயப்பட்டிருக்கிறோம் என்பதையும் நம் மௌனம் உணர்த்தும். யோசிக்காமல் சட்டென ஒரு வார்த்தையைப் பேசிவிட்டதால் முறிந்து போன உறவுகளும் நட்பும் ஏராளமாக இருக்கக்கூடும். அந்த விநாடியில் அந்த வார்த்தை தவிர்க்கப்பட்டிருந்தால் பல இன்னல்கள் காணாமல் போயிருக்கும்.

இப்போது அதிக நா கட்டுப்பாடு அரசியல் புள்ளிகளுக்கும் தொண்டர்களுக்கும் அவசியம் வேண்டும். தேர்தல் நெருங்க நெருங்க விவாதங்களும் விமர்சனங்களும் சூடுபிடிக்க ஆரம்பித்துவிடும். நாள்தோறும் காட்சி ஊடகங்கள் அனைத்தும் அரசியல் நிலைமை குறித்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. அது என்ன மாயமோ தெரியவில்லை. அவர்களுக்காகவே தினம் ஒரு பிரச்சினை வந்துவிடுகிறது. பேசுபவர்கள் அனைவரும் தங்கள் கட்சிகளின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கிறார்கள். காரசாரமான விவாதங்கள், வார்த்தைத் தாக்குதல்கள், கட்டுக்கடங்காத கோபம் என அந்த விவாதம் வேறொரு பரிமாணம் எடுத்துவிடுகிறது. அவர்களைக் கட்டுப்படுத்த நெறியாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கத்தி கூச்சல் போடுகிறார்கள். சட்டென உணர்ச்சிவசப்படுகிறார்கள்.

மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் நிறுத்திக்கொண்டு பேசவேண்டுமல்லவா? இவர்கள் இடத்தில் அந்தந்த கட்சித் தலைவர்களே இருந்தால்கூட அவர்கள் இந்த அளவுக்குக் கூச்சல்போட மாட்டார்கள். கண்ணியம் காக்கப்படல் வேண்டும். கொள்கைக்காக கொடி பிடிக்கலாம். ஆனால், எவரையும் இழிவாகவோ அநாகரிகமாகவோ தரம்தாழ்த்திப் பேசக் கூடாது.

வெறுப்பு அரசியல் என்னும் நோய்த்தொற்று அதிவேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இது பகை அரசியலாக வளர்ந்திருக்கிறது. அவரவர் கருத்துகளைச் சொல்லட்டும். கருத்து வேறுபாடும் கருத்து முரணும் பகைக்கு வித்தாகிவிட வேண்டுமா? தவறான தகவல்களுடன் இணைந்த வெறுப்புப் பேச்சு, பெரியளவிலான வன்முறைக்கு வழிவகுக்கும்.

சென்ற தலைமுறை அரசியல் தலைவர்கள் கொள்கைகளில் மாறுபட்டார்கள். ஆனால், அதைத் தாண்டிய நட்பும் மரியாதையும் அவர்களிடையே இருந்தன. மேடை நாகரிகத்தை அவர்கள் மீறியதில்லை. தற்போது மேடையில் பேசுபவர்களும் சமூக ஊடகங்களில் பேசுபவர்களும் மிகவும் எச்சரிக்கையுடன் பேசவேண்டும். தவறான ஒரு சொல் ஒரு பெரிய பிரளயத்தையே ஏற்படுத்திவிடும். இனியாவது, நம் அரசியல் களம் கொள்கைகளைப் பேசும் களமாக இருக்கட்டும்.

வீட்டுச் சண்டையின்போதும் சட்டென பேச்சு கடுமையாகிப் போய்விடுகிறது. வாய் வார்த்தை வளர்ந்து சர்ச்சைக்கு வித்திடுகிறது. கணவன் - மனைவி, மாமியார் - மருமகள், மருமகன் - மாமனார், சகோதர - சகோதரிகளிடையே சண்டை வரும்போது அதைக் கவனிக்கும் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் மனநிலையைப் பாதித்து, படிப்பிலிருக்கும் நாட்டத்தையும் குறைத்துவிடுகிறது. வீட்டில் அமைதியான, இனிமையான சூழல் இருந்தால் மட்டுமே குழந்தைகளின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும்.

அனைவரும் எதிராளிக்கு சமமாக நின்று பேச முடியாது; பேசத் தெரியாது. சண்டை போடப் பிடிக்காத அவர்கள் சகித்துக் கொண்டு மௌனமாக இருந்துவிடுவார்கள். யார் பக்கம் சரி, யார் பக்கம் உண்மையுள்ளது என்பது அபாண்டமாகப் பேசுபவருக்கும் அந்த ஆண்டவனுக்கும் தெரியும். அதுவே போதும். அவர்கள் ஓரளவுக்கு அடங்கிப் போகிறார்கள். ஒருகட்டத்தில் அவர்களும் பொங்கி எழுகிறார்கள். ''மிதிக்க மிதிக்க, நசுங்கிச் சாவதற்கு ஒருவரும் புழு அல்லவே. சொல்லுக்குச் சொல் சிங்காரம் எதற்கு?''- என்பார்கள். அதுபோல பதிலுக்கு தடித்த வார்த்தைகளை விட்டுவிடுகிறார்கள். அந்த நபர் இவர் சொன்னதை மட்டுமே அனைவரிடமும் சொல்லிச் சொல்லி பழிசுமத்துகிறார். சில சமயம் வாயடைத்துத்தான் போய்விடுகிறது. என்ன செய்ய?

பேச வார்த்தைகளற்றிருப்பது, அமைதி வார்த்தைகள் இருந்தும் பேசாமல் இருப்பது மௌனம். தொலைவை நிர்ணயிப்பது சாலைகள் மட்டுமல்ல; வார்த்தைகளும்தான். கூடுமானவரை அவர்களை மன்னித்து விடுவோம். மன்னிக்காத மனம் அமிலத்தைப் போன்றது. மனதை அரித்துவிடும்.

ஒரு நாள் ஒரு குதிரைக்காரன் ஒரு தோட்டம் வழியாகக் கடந்து செல்ல நேர்ந்தது. அவனது குதிரைக்குத் தண்ணீர் தரும்படி விவசாயியிடம் கேட்டான். விவசாயி மகிழ்ச்சியோடு தண்ணீர் எடுப்பதற்கு பெர்ஷியன் சக்கரத்தைச் சுழலவிட்டான். ஆனால், குதிரை அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்து, கிணற்றின் அருகே நெருங்கி வரவே இல்லை.

குதிரைக்காரன் கேட்டான்:

"என் குதிரை தண்ணீர் குடிப்பதற்காக இந்தச் சத்தத்தை நிறுத்த முடியுமா?

"முடியாது ஐயா. உமது குதிரை தண்ணீர் குடிக்க விரும்பினால் இந்தச் சத்தத்துடன்தான் குடிக்க வேண்டும். இங்கே சத்தத்துடன்தான் தண்ணீர் வரும் என்றான் விவசாயி.

நட்புகூட குறைபாடுகளுடன் தான் இருக்கிறது. வாழ்வுகூட மன்னிக்கும் மனநிலையில் இருந்துதான் ஊற்றெடுக்கிறது.மனநிறைவோடும் மனநிம்மதியுடனும் வாழவேண்டுமானால் கோபம் வரும்போது நம் வார்த்தைகளுக்கு கடிவாளம் போடவேண்டும்.

நன்றி - தினமணி

## நக்கல் நமசிவாயம்

எலெக்சன் நெருங்கட்டும் பாருங்கோ...
ஆளுங்கட்சியில உள்ள முஸ்லிம் எம்.பி. மார் அப்படியே இஸ்ரேலிய ப்ரைமினிஸ்டர விளாசித்தள்ளுவாங்க...



## இன்றைய நாளில்...

* 1837 – கனடாவில் ஆபிரிக்க கனேடியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
* 1854 – வெனிசுலாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது.
* 1882 – காசநோயை உருவாக்கும் நோய்க்கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ரொபர்ட் கோக் அறிவித்தார்.
* 1896 – வரலாற்றில் முதன்முதலாக வானொலி சமிக்ஞையை ரஷ்ய அறிவியலாளர் அலெக்சாண்டர் பப்போவ் உருவாக்கினார்.
* 1965 – இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழ் மொழிப் பயன்பாட்டை அமுலாக்கவும் அங்கு அரச நில பகிர்ந்தளிப்பில் தமிழ் மொழி பேசுவோருக்கே முன்னுரிமை வழங்கும் வகையிலும் டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
* 1965 – நாசாவின் ரேஞ்சர்-9 விண்கலம், சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.
* 1977 – இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினரல்லாத முதலாவது பிரதமராக மொரார்ஜி தேசாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
* 1993 – ஷூமேக்கர்-லேவி வால்வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது.

## தவக்கால சிந்தனை

### எலியா, எலிசா என்பவர்களைப் போல் இயேசுவும் யூதர்களுக்கென்று மட்டும் அனுப்பப்படவில்லை



இயேசு நாசரேத்துக்கு வந்திருந்தபோது தொழுகைக்கூடத்தில் மக்களை நோக்கிக் கூறியது: "நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. உண்மையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன். எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது; நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும், அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை. சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும், இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ரேலியரிடையே தொழுநோயாளர்கள் பலர் இருந்தனர். ஆயினும், அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சிரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது"

தொழுகைக்கூடத்தில் இருந்த யாவரும் இவற்றைக் கேட்டபோது, சீற்றங்கொண்டனர்; அவர்கள் எழுந்து, அவரை ஊருக்கு வெளியே துரத்தி, அவ்வூரில் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட இழுத்துச் சென்றனர். அவர் அவர்கள் நடுவே நடந்து சென்று அங்கிருந்து போய்விட்டார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** தந்தையின் உடல் நிலை மற்றும் சொத்துகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஆன்மீக தரிசனம் நன்மை தரும்.

**ரிஷபம்** தொழில் வியாபாரத்தில் யாரையும் நம்பி செயல்படாதீர்கள். வீணான டென்ஷனால் உடல் நோய்கள் அதிகரிக்கலாம்.

**மிதுனம்** உங்கள் முன்னேற்றத்தின் பொருட்டு துணைவியின் அன்பு ஆதரவு கிடைக்கும். கூட்டு தொழில் கவனம்.

**கடகம்** செய்தொழில் வியாபார விருத்தி, புதிய நண்பர்கள் அறிமுகம்,விருந்து பசாரங்களில் பங்குபற்றுவீர்கள்.

**சிம்மம்** அதிர்ஷ்டம் கை கொடுக்கும் நாள். திடீர் பண இலாபங்கள் உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி.

**கன்னி** வீடு வாகன நன்மைகள், இலாபங்கள் உண்டு. கல்வியில் சாதனை படைக்கும் நாள்.

**துலாம்** மனத் துணிவுடனும் தைரியத்துடனும் அனைத்து முட்டுக்கட்டைகளையும் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்** கட்டுப்பாட்டுடன் செலவுகளை மேற்கொள்ளுங்கள். கொடுத்த வாக்கினை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** நீங்கள் விரும்பியவற்றை கொள்வனவு செய்யும் நாள். மனதை ஒரு கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்** மருந்துப் பொருட்களுக்காக செலவுகளை மேற்கொள்வீர்கள். வீதிப் போக்குவரத்தின்போது கவனம் வேண்டும்.

**கும்பம்** திடீர் பண அதிர்ஷ்டத்தால் மகிழ்ச்சி, இலாபம் உண்டு. புத்தி, திறமைகளை கொண்டு வெற்றி வாகை சூடுவீர்கள்.

**மீனம்** தொழில் வியாபார வகையில் அனைத்து இலாபங்களையும் அடைவீர்கள். கேட்ட உதவி கிடைக்கும்.

**திதி:** தசமி பி.இ.5.05 வரை பின் ஏகாதசி
**நட்சத்திரம்:** உத்திராடம் பி.இ.4.26 வரை பின் திருவோணம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** மரண யோகம்; பி.இ.6.00 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை- 6.12 – 7.12 மணி வரைபகல் -1.12 – 2.12 மணி வரை மாலை- 3.12 – 4.12 மணி வரை
**ராகு காலம்:** 7.42 – 9.12 மணி வரை
**எமகண்டம் :** 10.42– 12.12 மணி வரை
**குளிகை:** 1.42 – 3.12 மணி வரை
**சந்திராஷ்டமம்:** இடப-மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் (முற்பகல் 10.24 வரை இடப ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 4.26 வரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 4.26 மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம். தொலைபேசி : 077-0525325 078-6759739

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் பரிசீலனை

*(எம்.ஏ.அமீனுல்லா)*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களுக்கு வழங்கிய சாதகமான வாக்குறுதிகளை கவனத்திற்கொண்டு, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை பரிசீலனை செய்துவருவதாக பேராதனை பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் பொது செயலாளர் வே.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் தொடர்பில் தாம் காலவரையொன்றை வழங்கியிருப்பதாகவும் அவ்வாறு குறுகிய காலத்துக்குள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை இழுபறி நிலைமைகளுக்கு சென்று இந்த மறுமலர்ச்சி அரசாங்கத்தின் கீழும் தொடர்ந்தும் ஆசை வார்த்தைகளைக் காட்டி ஏமாற்றப்பட்டால் எமது முன்னரை விட கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

நேற்றுக் (23) காலை ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர்கள் குழுவுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன தலைமையிலான குழுவுக்குமிடையில் கடந்த வியாழக்கிழமையன்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தலைவர் மேற்படி சாதகமான கருத்துகளை தெரிவித்துள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

கடந்த 75 நாட்கள் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர கைச்சாத்திடப்பட்ட உடன்பாட்டு ஒப்பந்தத்தை ஆணைக் குழுவுக்கு அனுப்பி தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 14/2024 இல் உள்ள பிரச்சினைகள் குறித்து அறிக்கை ஒன்றினை தயாரித்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு மீண்டும் கடிதமொன்றினை அனுப்புதல், இடைநிறுத்தப்பட்டுள்ள மொழித்தேர்ச்சி கொடுப்பனவை வழங்குவதற்காக புதிய அரசாங்கத்துக்கு மீண்டும் பரிந்துரை செய்தல் ஆகியவற்றுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளன எனவும் மேலும் ஒருங்கிணைந்த கொடுப் பனவை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளுடன் மீண்டும் கடிதம் அனுப்ப இணக்கம் தெரிவித்தல், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு 03 தொகுதி இலவச புகையிரத பயண அனுமதிச்சீட்டுகள் வழங்குவதற்குத் தேவையான தகவல்களை வழங்குமாறு தொழிற்சங்கங்களைக் கேட்டுக்கொண்டதுடன், அந்தத் தகவல்களின் அடிப்படையில் புதிய அரசாங்கத்துக்கு தொடர்புடைய தகவல்களை வழங்க இணக்கம் தெரிவித்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவை மற்றும் அடிக்கடி வெளியிடப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கைகளை தமிழ் மொழியில் வெளியிடுவதற்காக தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை விரைவாக நியமிக்க நடவடிக்கை எடுத்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கீழ் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வளாகங்கள் ஆகியவற்றுக்கிடையில் கல்விசாரா அணியினர் இடமாற்றங்கள் குறித்து பல்கலைக்கழக உபவேந்தர்களை அறிவுறுத்தி பொருத்தமான நடைமுறையை உருவாக்குதல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் தற்போது அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா அணியினரின் வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளுக்கு விரைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது போன்ற எட்டு விடயங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது முடிவுகள் எட்டப்பட்டன எனவும் பேராதனை பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# தெவிநுவர துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்த சம்பவம்

## சந்தேகநபர்கள் நால்வருக்கு 29 வரை விளக்கமறியல்

தெவிநுவர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரட்டைக் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, அவர்கள் மாத்தறை பதில் நீதவான் முன் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை தடுத்து வைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை (21) இரவு 11.45 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

மேலும், இரட்டைக் கொலை தொடர்பான மேலதிக விவரங்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னணியில் முக்கிய சந்தேகநபராக பிரபல குற்றவாளியான பலே மல்லி என்று பிரபலமாக அறியப்படும் ஷெஹான் சத்சாரா அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்காக 50 இலட்சம் ரூபா ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

பசிந்து தாரகா (வயது 29) மற்றும் யோமேஷ் நடீஷன் மற்றும் பலே மல்லி என அடையாளம் காணப்பட்ட இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. சந்தேக நபர் தற்போது துபாயில் மறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற இருவர் கட்டுநாயக்கவில் கைது

வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

துபாயிலிருந்து இலங்கைக்கு வந்த கைதுசெய்யப்பட்ட பயணி, கைதுசெய்யப்பட்ட நேரத்தில் மொத்தம் 10,000 சிகரெட்டுகளை வைத்திருந்தார். கைதுசெய்யப்பட்ட நபர் குருநாகலைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், நேற்று (23) அதிகாலை, பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் (PNB) விமான நிலையப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், BIA வருகை முனையத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரத்தில் துபாயிலிருந்து விமானத்தில் சட்டவிரோதமாக நாட்டுக்கு சிகரெட்டுகளை கொண்டு வந்த பெண் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 23,600 சிகரெட்டுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# புத்தளம் மாநகர சபைக்கு 18 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக 230 பேர் போட்டி

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புத்தளம் மாநகர சபைக்கான 18 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 08 அரசியல் கட்சிகள் மற்றும் 03 சுயேச்சை குழு என 230 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். முழுமையாக மூன்று வேட்புமனுவும் பகுதியளவில் ஒருவரின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாநகர சபைத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் என 16 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில், வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும் காலப்பகுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சர்வஜன அதிகாரம் என 10 அரசியல் கட்சிகளும் ஏ.ஓ.அலிக்கான், ஏ.எஸ்.சுபியான், எம்.எல்.பால்ராஜ், ஏ.எஸ்.எம்.அஸ்லம் ஆகியோரின் தலைமையிலான 04 சுயேச்சை குழுக்களால் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா தொழிலாளர் காங்கிரஸ், ஏ.எஸ்.எம்.அஸ்லம் சுயேச்சை குழு ஆகியவைகளின் வேட்புமனுக்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்டதுடன், பகுதியளவில் எம்.எல். பால்ராஜ் தலைமையிலான சுயேச்சை குழுவில் மொஹமட் றம்சான் ராசா மொஹமட் என்பவரின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டதுடன், ஏனைய 08 அரசியல் கட்சிகள் மூன்று சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புத்தளம் மாநகர சபைக்கு 11 வட்டாரங்களில் இருந்து 11 உறுப்பினர்களும் போனஸ் உறுப்பினர்கள் 07 என 18 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு இம்முறை 36,523 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசாரணைக்காக கணினிமயமாக்கப்பட்டுள்ள ஒரு மில்லியன் குற்றவாளிகளின் கைரேகைகள்



விசாரணை நோக்கங்களுக்காக மொத்தம் ஒரு மில்லியன் குற்றவாளிகளின் கைரேகைகள் இப்போது கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித்துறை மற்றும் பொலிஸ் கைரேகைப் பிரிவுடன் இணைந்து இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றப் பதிவுப் பிரிவின் இயக்குநர் எஸ்.எஸ்.பி.ருவன் குமார தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு தொடங்கிய கணினிமயமாக்கல் செயல்முறை, விசாரணைகளுக்காக எந்த நேரத்திலும் கைரேகைப் பதிவுகளை அணுக பொலிஸாரை அனுமதிக்கிறது.

# கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலய இலட்சார்ச்சனை நிகழ்வுகள்

**(சாவகச்சேரி நிருபர்)**

தென்மராட்சி - கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான இலட்சார்ச்சனை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 03மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளன.

ஏழாவது நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணிக்கு 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேக நிகழ்வு இடம்பெறுவதுடன் வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் அரங்கேறவுள்ளது.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ஜெகநாதக்குருக்கள் சந்திரசேகரக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிசி விற்பனை தொடர்பில் சுற்றிவளைப்பை அதிகரிக்கும் பாவனையாளர்கள் அதிகார சபை

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களைத் தேடி மேற்கொள்ளும் சுற்றிவளைப்புகளை அதிகரிக்கவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல்வேறு விலைகளில் சில போலி வர்த்தகர்களும் ஆலை உரிமையாளர்களும் அரிசி விற்பனை செய்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், அரிசியை மறைத்து வைத்துள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், தற்போது பச்சை அரிசி, நாட்டரிசி, சம்பா, கீரி சம்பா அரிசி ஆகியவற்றுக்காக இப்போது உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வருடத்தின் கடந்த மாதங்களில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 500 பேருக்கு மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக 3000க்கு மேற்பட்ட கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் முடிவு

## அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

2025 உள்ளூராட்சித் தேர்தலுக்காக 3,000க்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒருவர் வீதம் 160 அதிகாரிகள் கண்காணிப்பு செயல்முறைக்காக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் கண்காணிப்பு முயற்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளராக மஞ்சுள கஜநாயக்க செயற்படுவார்.

2025 உள்ளூராட்சித் தேர்தல் மே 06ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கிடையில், வேட்பாளர்களுக்கான செலவு வரம்பு அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சீனன்கோட்டை ஜாமிஅத்துல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் அல்குர்ஆன் தமாம் நிகழ்வு

**(பேருவளை பி.எம்.முக்தார்)**

பேருவளை, சீனன்கோட்டை ஜாமிஅத்துல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தில் ரமழான் மாதம் மாணவர்களால் ஓதப்பட்ட 30 அல் குர்ஆன்கள் தமாம் செய்யும் நிகழ்வும் இப்தார் நிகழ்வும் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் புதன்கிழமை(26) மாலை 05 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஷாதுலிய்யா தரிக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் ஷைகுஸ் ஸஜ்ஜாதா அஷ்ஷைக் மஹ்தி அல்-பாஸி அன்னவர்களின் அனுமதியுடனும் இலங்கைக்கான கலிபத்துல் குலபா மௌலவி அல் - உஸ்தாத் எம். இஸட் முஹம்மத் ஸுஹைர் (பாரி)யின் ஆலோசனையுடனும் 2ஆவது வருடமாக நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம். ஜே. எம்.பஸ்லான், கலாபீட அதிபர் மௌலவி எம்.ஏ.எம்.அஸ்மிகான் ஆகியோரின் தலைமையில் கலாபீட நிர்வாக சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.சீ.எம்.ஹம்ஸா, ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஷாதுலிய்யா இக்வான்கள், பெற்றோர்களுடைய பங்களிப்புடன் நடைபெறவுள்ளன.

இந்த 30 அல்குர்ஆன்கள் இறைத் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரிலும் ஷாதுலிய்யா தரீக்காவின் இமாம் அபுல் ஹஸன் ஷாதுலி (றழி) உட்பட ஷாதுலிய்யா மஷாயிக்மார்கள், அஹ்லு பைத்துகள், முன்னாள் கலீபத்துல் குலஃபா மௌலவி ஜே.அப்துல் ஹமீத், எம்மை விட்டுப் பிரிந்த கலீபாக்கள், பெற்றோர், உற்றார் உறவினர்கள், சீனன்கோட்டையில் வாழ்ந்து மரணித்தவர்கள், கலாபீடத்துக்கு பாடுபட்டு மறைந்தவர்கள், அனைத்து முஸ்லிமான ஆண்கள், பெண்கள் பேரிலும் தமாம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன நாட்டில் நிரந்தர சமாதானம், நிம்மதி, சுபீட்சம் வேண்டியும் இங்கு விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது.




***ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபி(ஸல்) அவர்கள் ரமழானின் கடைசி பத்தில் இஃதிகாப் இருப்பவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அவரை மரணிக்கச்செய்யும்வரை தொடர்ந்து இருந்து வந்தார். அவர்களுக்கு பின்னர் அவர்களின் மனைவிமார்களும் இஃதிகாப் இருந்தார்கள்.***

***(ஆதாரம், புகாரி, முஸ்லிம்)***

***ரமழானின் கடைசிப்பத்து இன்று ஆரம்பமாகிறது. இந்த இறுதிப்பத்தில்தான் புனித லைலதுல் கத்ர் இரவும் இருக்கின்றது. எனவே பள்ளிவாசல்களில் இஃதிகாப் இருக்க முடியுமானவர்கள் அதில் ஈடுபட்டு நன்மைகளை அடைந்துகொள்ள முயற்சிப்பதுடன் ஏனையவர்கள் இரவு நேரங்களில் முடிந்தளவு இபாதத்களில் ஈடுபட முயற்சிப்போம்.***

**(தொழுகை நேரங்கள்)**
**(21ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 4.59 |
| சூரிய உதயம் | - | 6.14 |
| ழுஹர் | - | 12.19 |
| அஸர் | - | 3.31 |
| மஃரிப் | - | 6.21 |
| இஷா | - | 7.31 |

# நாட்டில் சடுதியாக அதிகரித்துள்ள துப்பாக்கிக் கலாசாரம்; 03 மாதங்களில் 27 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 22 பேர் பலி



நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2025 ஜனவரி முதல் இதுவரை 27 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

**கடந்த மூன்று மாதங்களில் பதிவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் விபரம் வருமாறு:**

**ஜனவரி 04:** வெலிகம – கப்பரத்தோட்ட, வல்லிவெல பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 26 வயது இளைஞனொருவர் உயிரிழந்தார்.

**ஜனவரி 07:** மவுண்ட்லவேனியா – வட்டரப்பல சாலையில் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் 36 மற்றும் 20 வயதுடைய இரு குடியிருப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

**ஜனவரி 09:** அஹுங்கல்ல – 'லொகு பட்டி' என்ற குற்றவியல் கும்பல் உறுப்பினரின் உறவினரொருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

**ஜனவரி 13:** தெவிநுவர – உலர் மீன் வியாபாரியொருவர் தனது வீட்டுக்கு வெளியே வாடிக்கையாளர்களாக நடித்து தாக்குதல் நடத்தியவர்களால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தப்பினார்.

**ஜனவரி 15:** தொடங்கொட – வில்பதவிலுள்ள வீடொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது. ஆனால், எவரும் காயமடையவில்லை.

**ஜனவரி 16:** மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு வெளியே நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். அதே நாளில் களுபோவிலவில் பாடசாலையொன்றுக்கருகே மோட்டார் சைக்கிளில் சென்ற துப்பாக்கிதாரிகள் சுட்டனர். ஆனால் உயிரிழப்பு ஏற்படவில்லை.

**ஜனவரி 19:** மவுண்ட்லவேனியாவில் 24 மற்றும் 36 வயதுடையவர்கள் ரூ.1.5 மில்லியனுக்கு ஒப்பந்தக் கொலை செய்யப்பட்டனர். துப்பாக்கிதாரி 15 நிமிடங்களில் கைதுசெய்யப்பட்டார்.

**ஜனவரி 22:** அம்பலாந்தோட்ட கோகல்லவில் நபர் ஒருவரை நோக்கி காரில் வந்த துப்பாக்கிதாரிகள் சுட்டனர். ஆனால், காயங்கள் ஏற்படவில்லை.

**ஜனவரி 31:** ஹினிதும, காலி ரி-56 ரகத் துப்பாக்கியால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் விடுதி உரிமையாளர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

**பெப்ரவரி 07:** மினுவாங்கொட பாடசாலையொன்றுக்கருகே மோட்டார் சைக்கிளில் சென்ற இரு துப்பாக்கிதாரிகளால் 35 வயது ஆணொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பெப்ரவரி 10:** கொட்டாஞ்சேனை, பெனடிக்ட் மாவத்தையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கும்பலுடன் தொடர்புடைய 43 வயது ஆணொருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

**பெப்ரவரி 19:** மித்தெனியவில் ஆண் ஒருவரும் அவரது இரு குழந்தைகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேநாளில், புதுக்கடையில் பிரபல குற்றவாளி கனேமுல்ல சஞ்ஜீவ புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக மாறுவேடமிட்ட சந்தேகநபரால் படுகொலை செய்யப்பட்டார்.

**பெப்ரவரி 21:** ஜா-எல மற்றும் கொட்டாஞ்சேனையில் இரு தனித்தனி துப்பாக்கிச் சூடுகளில் இருவர் கொல்லப்பட்டனர். கொட்டாஞ்சேனை துப்பாக்கிதாரிகள் பின்னர் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

**பெப்ரவரி 26:** மினுவாங்கொடயில் 'கெஹெல்பத்தர பத்மே' என்ற குற்றவாளியுடன் தொடர்புடைய ஒருவர் பத்ததுவன சந்தியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

**மார்ச் 08:** கம்பஹாவில் கொல்லப்பட்ட கனேமுல்ல சஞ்ஜீவவுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் கடையொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது.

**மார்ச் 13:** காலியில் பூஸா சிறைச்சாலை முன்னாள் கண்காணிப்பாளர் சிறிதத் தம்மிக தனது வீட்டில் சுட்டுக்கொல்லப்பட்டார். வெலிவேரியவில் நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூட்டில் 26 வயது இளைஞர் காயமடைந்தார்.

**மார்ச் 14:** அம்பலங்கொடவில் 'பொடி சுத்தா' என்று அறியப்பட்ட 39 வயது ஆணொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**மார்ச் 17:** மிதிகம, பத்தேகமவில் உள்ள வீடொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது. ஆனால், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. அதேநாளில் மாலைவேளை கிராண்ட்பாஸின் நாகலகம் தெருவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

**மார்ச் 22:** தெவிநுவர, தேவுண்டர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்துக்கருகே நடந்த துப்பாக்கிச் சூட்டில் 28 மற்றும் 29 வயதுடைய இரு இளைஞர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற 'வவுனியா சங்கமம்' அறிமுக விழா






(சி.திவியா)

வவுனியாவில் 'வவுனியா சங்கமம்' அறிமுக விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பழைய மாணவர் ஒன்றியம் 'வவுனியா சங்கமம்' என்ற பெயரைக் கொண்டு இங்கிலாந்தில் சென்ற ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. தேசத்தின் உறவுகளாக இங்கிலாந்தில் ஒன்றுகூடி மகிழ்வது மட்டுமல்லாமல் தேசத்தின் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டிலும் எல்லைப்புறக் கிராமங்களின் முன்னேற்றத்திலும் பங்கு கொள்வதற்குமாக உருவாக்கப்பட்ட வவுனியா பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, 25 முன்பள்ளிகளுக்கான தொலைக்காட்சி மற்றும் பென் டிரைவ் வழங்கப்பட்டதுடன், சங்கமம் 2024 நூல் அறிமுகமும் இடம்பெற்றது. அத்துடன், கலை, கலாசார நிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம், முத்து முகமது, பிரதேச செயலாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வவுனியா மாவட்ட பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







**வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வு கொழும்பு புதுச்செட்டித்தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் கடந்த சனிக்கிழமை (22) இடம்பெற்றது. இதன்போது, மௌலவி அபூதாலிப் இர்ஷாத் ஷரபி இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மேற்கொண்டிருந்தார். நிகழ்வில் சிறப்பு அதிதியாக சமூக சேவையாளர் கே.எம்.ஜே.பஷீர் கலந்துகொண்டார். சாயி பாபா நிலையத்தின் சார்பில் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.**






**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டமும் வட கொழும்பு தொகுதி கொட்டாஞ்சேனை மேற்கு தேசிய மக்கள் சக்தியின் நகர சபை திறப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக இடம்பெற்றன. இந்நிகழ்வு கொழும்பு, கொட்டாஞ்சேனை மேற்கு தொகுதி வேட்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தலைமையில் இடம்பெற்றதோடு கொழும்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் வட கொழும்பு தொகுதி அமைப்பாளருமான சிவானந்த ராஜா மற்றும் கொழும்பு மேயர் வேட்பாளர் வ்ராய்கெலி பல்சதார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.**

# இலங்கை மத்திய வங்கியின் சமூகம்சார் முக்கிய நிகழ்வு நுவரெலியாவில்










(செ.திவாகரன்)

இலங்கை மத்திய வங்கி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு 'திறந்த நாள் நிகழ்ச்சியை' ஏற்பாடு செய்திருந்தது.

நுவரெலியா - பதுளை பிரதான வீதியோரத்தில் பொதுமக்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் நடமாடும் நுவரெலியா, கிரகறி வாவிக்கரையோரத்தில் அமைந்துள்ள வாகனம் நிறுத்தும் திடலில் கடந்த இருநாட்களாக (22, 23) நடைபெற்றது.

இந்த திறந்த நாள் முயற்சி நிகழ்ச்சி சமீபத்திய டிஜிட்டல் கட்டண முறைகள் குறித்த பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதையும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் பணம் செலுத்துவது குறித்த தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

மேலும் நிகழ்வில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் போன்ற மின்-பண சேவை வழங்குநர்கள், அத்துடன் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) உள்ளிட்ட மொபைல் கட்டண செயலிகள் சேவை வழங்குநர்கள் நேரடி அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டனர்.

குறிப்பாக, EPF மொபைல் சேவைகள் - ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) சேவைகள் தொடர்பான உதவியை வழங்குதல் மற்றும் பொதுமக்கள், மத்திய வங்கியின் வெளியீடுகளை வாங்குவதற்கான ஒரு பிரத்தியேக புத்தகக் கடையும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தொழில் புரிவோர், மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு நன்மை பயக்கும் விடயங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# யாழில் ஹெரோயினுடன் இளைஞர்கள் இருவர் கைது!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இளைஞர்கள் இருவர் ஹெரோயினுடன் நேற்று (23) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 805 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. சந்தேகநபர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

தொல்பொருள் பெறுமதிமிக்க பாதுகாப்பு வனப் பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் உட்புகுந்து புதையல் தோண்டிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை அநுராதபுரம் சிவலாக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சிவலாக்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் (22) ஹல்மில்லவெவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் மூவரைக் கைதுசெய்துள்ளதுடன், புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 29, 37, 48 வயதுடைய மிஹிந்தலை மற்றும் கலன்பிந்துனுவெவ படிகாரமடுவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் சிவலாக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# த.மு.கூவின் முதலாவது பிரசாரக் கூட்டம் கொட்டகலையில்





தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் கொட்டகலையில் நேற்று (23) இடம்பெற்றது.

கொட்டகலை முத்துவிநாயகர் ஆலயத்தில் சிறப்பு வழிபாட்டு பூஜைகள் இடம்பெற்றதுடன் கொட்டகலை RDM மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர்களும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுமான பழனி திகாம்பரம், இராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் மீண்டும் இணைவு

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் படகு சின்னத்தில் போட்டியிட புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்து





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் கூட்டமைப்பு புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளிதரனும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனும் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிலும் சனிக்கிழமை (22) மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் கைச்சாத்திட்டனர்.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னடைவைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்குவதற்காக புதிய முயற்சியொன்றை பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டு கிழக்கு தமிழர் கூட்டமைப்பு எனும் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்குமிடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கடந்த 15ஆம் திகதி சைச்சாத்திடப்பட்டது.

இதனையடுத்து, நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து களமிறங்கியுள்ளனர். இந்நிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்புடன் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக் கட்சிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் மீண்டும் இணைந்துள்ளனர்.

# கிழக்கு மாகாண மக்களின் உயிரைக் காக்கவே விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்தோம்

## இதனை புரிந்து மக்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் என்கிறார் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்



(வீரமுனை செய்தியாளர்)

''விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நாங்கள் பிரிந்தவர்கள் என்பதை விட நாங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் என்றுதான் கூற வேண்டும். இந்நிலையில், எமது கிழக்கு மாகாண இளைஞர்கள், மக்களின் உயிர்களைக் காக்க வேண்டும் என்பதற்காகவே பிரிந்து வரும் முடிவை எடுத்தோம்'' - என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மேலும், அனுபவம் வாய்ந்த களத் தளபதிகளாகவும் அனுபவம் வாய்ந்த அரசியற் தலைவர்களாகவும் இன்று சாதித்திருக்கின்றோம். இவற்றை எமது கிழக்கு மாகாண மக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களும் எம்முடன் இணைய வேண்டும். இது வடக்கு, கிழக்கு அல்ல இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான அடித்தளமாகவே அமையும் - என்றார்.

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்னும் புதிய கூட்டணியில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளிதரன் மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் சனிக்கிழமை(22) மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தலில் பின்னடைவைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காக புதிய முயற்சியொன்றை பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டு அவர் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கிடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கடந்த 15ஆம் திகதி சைச்சாத்திடப்பட்டது. இதனையடுத்து நடக்கவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்புடன் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் மீண்டும் இணைந்துள்ளனர். இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

''இது புதிய இணைவல்ல. நாங்கள் இணைந்து தான் இருந்திருக்கின்றோம். இன்று ஒரு தேவை கருதி ஒன்றாக இருந்து ஒரு தெளிவாக்கலை மேற்கொண்டிருக்கின்றோம். நான் மத்திய அரசோடு பயணித்தவன். பிள்ளையான் மாகாண அரசில் செயற்பட்டவர். அந்தக் காலத்தில் நாங்கள் இருவரும் இணைந்து பாரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து பல மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றோம். இன்று அதே நோக்கத்துடன் மீண்டும் இணைந்திருக்கின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நாங்கள் பிரிந்தவர்கள் என்பதை விட நாங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் என்றுதான் கூற வேண்டும். அந்த நிலையில், நாங்கள் எமது கிழக்கு மாகாண இளைஞர்கள், மக்களின் உயிர்களைக் காக்கவேண்டும் என்பதற்காகவே பிரிந்து வரும் முடிவை எடுத்தோம். அதன் பிற்பாடு நாங்கள் பல துன்ப துயரங்களைச் சந்தித்திருக்கின்றோம். விடுதலைப் புலிகளை எதிர்த்து நின்று வென்றவர்கள் என்றால் அது நாங்கள் மட்டுமாகத் தான் இருக்க முடியும். அந்த தலைமையின் தவறான முடிவினாலேயே நாங்கள் வெளியேறினோம்.

அந்த நிலையில், கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட கட்சிதான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி. இதனை நாங்கள் சாதாரணமாக நினைத்து விட முடியாது. பல்லாயிரக்கணக்கான போராளிகளின் தியாகங்களால் அத்திவாரமிடப்பட்ட கட்சியே அது. அக்காலம் ஆயுதக் கலாசாரம் மிகவும் தீவிரமாக ஊறியிருந்த நிலையில் மக்களை ஜனநாயக வழியில் கொண்டுவருவதென்பது மிகவும் கடினமான ஒரு விடயம். அந்த நிலையில், கிழக்கு மாகாண மக்களுக்கான அரசியலை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவந்த கட்சி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியாகும்.

இதனை எவரும் மறுக்க முடியாது. இன்று பல மாற்றங்களைக் கடந்து மீண்டும் நாங்கள் இணைந்திருக்கின்றோம். ஏனெனில், நாங்கள் எந்த நோக்கத்துக்காக விடுதலைப் போராட்டத்தில் இருந்து வந்தோமோ அதே நோக்கத்துக்காக நாங்கள் மீண்டும் இணைந்திருக்கின்றோம். ஏனெனில், போலித் தேசியவாதிகளின் ஏமாற்றுவித்தைகள், அவர்களின் வளர்ச்சிகளை ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தகுந்த பதிலடி கொடுத்திருக்கின்றார்கள். அவர்களே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் துரோகிகளாகக் கருதி கடந்த பொதுத்தேர்தலில் அவர்களை விரட்டியடித்திருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் எமது மக்கள் இன்னும் தெளிவாக வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில், மிகவும் ஆபத்தான கட்டத்தில் நின்றுகொண்டிருக்கின்றோம். எனவே, எமது இணைவென்பது தொடர்ந்தும் முடிவற்ற வளர்ச்சிப்பாதையை நோக்கியதாகவே இருக்கும். இது கிழக்கு மாகாணம் மாத்திரம் என்றிருக்காது. தமிழ் மக்களுக்கான உழைப்பு என்றும் இருக்கும். ஏனெனில், வரலாற்றைப் படைத்தவர்கள் நாங்கள். வரலாற்றை மாறியமைத்தவர்கள் நாங்கள். எங்கள் முன்நின்று தேசியம் பேசுவதற்கு எவருமே அருகதையற்றவர்கள். தற்போது தேசியம் தேசியம் என்று கூறி மக்களை ஏமாற்றி, புலம்பெயர் மக்களின் பணங்களைப் பெற்றுக் கொண்டு தங்கள் சுயநலங்களை வளர்ப்பவர்களே தேசியவாதிகளாக எங்கள் முன் வருகின்றார்கள்.

இதனை குறிப்பாக, எமது போராளிகள், மாவீரர் குடும்பங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கின்றேன். அத்துடன், இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் படகுச் சின்னத்தில் எங்கள் உறுப்பினர்கள் போட்டி போடுகின்றார்கள். அவர்களுக்கான வாக்குகளையும் எமது மக்கள் வழங்க வேண்டும். ஏனெனில், எங்களின் இருப்புகளை நிலைநாட்டுவதற்காக அந்த வாக்குகளை வழங்க வேண்டுமென்பதை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

எங்கள் பயணம் வருகின்ற மாகாண சபையை நோக்கியதாகவே இருக்கின்றது. ஏனெனில், கடந்த காலத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரோகம் செய்து எட்டு ஆசனங்களைப் பெற்ற முஸ்லிம்களுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கியது. ஆனால், அதற்கு முன்னர் மாகாண சபை ஆட்சியை தமிழர் சார்பில் நிரூபித்துக் காட்டியது பிள்ளையான் மட்டும் தான். வடமாகாணசபையை விக்கினேஸ்வரன் முதலமைச்சராகப் பொறுப்பேற்று பாரிய கல்விமானாக இருந்தபோதிலும் பல மில்லியன் ரூபாக்கள் திருப்பி அனுப்பப்பட்டன. அந்த வகையில், நாங்கள் அனுபவம் வாய்ந்த களத் தளபதிகளாகவும் அனுபவம் வாய்ந்த அரசியற் தலைவர்களாகவும் இன்று சாதித்திருக்கின்றோம். இவற்றை எமது கிழக்கு மாகாண மக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களும் எம்முடன் இணைய வேண்டும். இது வடக்கு, கிழக்கு அல்ல இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான அடித்தளமாகவே அமையும்''- என்றார்.

# கலப்பையில் சிக்குண்டு இளைஞன் உயிரிழப்பு

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அகத்திக்குளம் பிரதேசத்தில் வயலில் உழுதுகொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்திருக்கலாமெனக் கருதப்படும் 16 வயது இளைஞன் கலப்பையில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் சனிக்கிழமை(22) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இளைஞன் கண்ணகி கிராமத்தைச் சேர்ந்த பெ.ஜீரோசன் என அடையாளம் காணப்பட்டார். குறித்த இளைஞன் குடும்பத்தில் மூத்தபிள்ளை. இரு சகோதரிகளுடன் வாழ்ந்து வரும் இவர் கடந்த ஒருவருடத்துக்கும் மேலாக பாடசாலையிலிருந்து இடைவிலகி பல்வேறு தொழில் புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில், உழவு இயந்திர சாரதியாக வேண்டுமெனும் ஆசையில் நெருங்கிய நண்பரொருவருடன் உழவு இயந்திரத்தில் பயிற்சியெடுத்து வந்துள்ளார். தினமும் சில ஏக்கர் வயல்நிலங்களை உழுதுவிட்டு நண்பரின் உழவு இயந்திரத்தில் நண்பர் உழுது கொண்டிருக்கும்போதே அருகில் இருந்தவர் தவறி வீழ்ந்து வயலை இரட்டிப்பாக்கும் கலப்பைக்குள் அகப்பட்டு நசுங்கி உயிரிழந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

உழவு இயந்திரத்தின் சாரதியான உயிரிழந்தவரின் நண்பன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். குறித்த சம்பவத்தினால் அக்கரைப்பற்று பிரதேசமே பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்த சம்பவம்

# மட்டு. மேல்நீதிமன்றம் நால்வருக்கு மரணதண்டனை வழங்கி தீர்ப்பளிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சந்திவெளியில் 2017ஆம் ஆண்டு ஒருவரை துப்பாக்கியால் சுட்டு மரணத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கிரான் மற்றும் சந்திவெளி பிரதேசங்களைச் சேர்ந்த 04 பேருக்கு மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் வெள்ளிக்கிழமை (21) மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

கடந்த 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி சந்திவெளியைச் சேர்ந்த மயில்வாகனம் ரவீந்திரன் என்பவர் ரி 56 ரகத் துப்பாக்கியால் அந்தப் பகுதியில் இயங்கிவந்த ஆயுதக்குழு ஒன்றைச் சேர்ந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்திவெளி மற்றும் கிரான் பிரதேசங்களைச் சேர்ந்த தி.கிருஸ்ணரூபன், வ.திருச்செல்வம், கு.பாஸ்கரன், க.மகேந்திரன் ஆகிய நால்வரையே ஏறாவூர் பொலிஸார் கைது செய்து அவர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்றுவந்த நிலையில் குறித்த நால்வரும் குற்றவாளிகளென கண்டுகொண்டதையடுத்து நீதவான்அவர்களுக்கு மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

# வேட்பாளர் பட்டியலில் கையொப்பமிடச் சென்றவர் தப்பியோட்டம்

(குருக்கள்மடம் செய்தியாளர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன.

இந்நிலையில், போரதீவுப்பற்று உள்ளூராட்சி மன்றத்துக்கு வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு அரசியல் கட்சியொன்று மிகவும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தது. இந்நிலையில், அப்பிரதேசத்திலுள்ள வட்டாரமொன்றில் போட்டியிடுவதற்காக அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை அரசியற்கட்சியொன்று கட்டாயத்தின் பேரில் அவர்களுடைய வாகனத்தில் ஏற்றிக்கொண்டு விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்காக களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள அக்கட்சிக் காரியாலயத்துக்கு புதன்கிழமை (19) சென்றுள்ளனர்.

குறித்த நபரை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனச் சாரதி அக்காரியாலயத்தின் முன்னால் அமைந்துள்ள வீதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே செல்லுங்கள் என குறித்த நபரிடம் கூறியுள்ளார். ஆனாலும், அந்த நபர் நான் உள்ளே சென்று கையொப்பம் இடுகின்றேன் எனக் கூறிவிட்டு அருகிலிருந்த பற்றைக் காடுகளூடாக தப்பியோடி கால்நடையாகவே போரதீவுப்பற்றுப் பிரதேசத்திலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று சேர்ந்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

அரசியல் கட்சியொன்றின் வாகனத்தில் சென்ற நீங்கள் ஏன் நடந்து வருகின்றீர்கள் என அவரது வீட்டிலுள்ளோரும் கிராமத்தவர்களும் அவரிடம் வினவியுள்ளனர்.

"எனக்கு அரசியல் சரிவராது, என்னால் முடியாது எனத் தெரிவித்திருந்தும் என்னை கட்டாயத்தின் பேரிலேயே ஏற்றிக்கொண்டு சென்றனர். நான் அவர்களின் பிடியிலிருந்து அவர்களுக்குத் தெரியாமலேயே தப்பிப் பிழைத்து கடந்து வந்துவிட்டேன்" - என பதிலளித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் அரசியற் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மிகவும் பிரயத்தனத்துக்கு மத்தியிலேயேதான் அனுபவமில்லாதவர்களையும் கல்வியறிவு குறைந்தவர்களையும் களமிறக்கியுள்ளதாக அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# 161ஆவது தேசிய பொலிஸ் வீரர்கள் தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(மட்டக்களப்பு செய்தியாளர்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றி உயிரிழந்த பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களை நினைவு கூரும் முகமாக தேசிய பொலிஸ் வீரர்கள் தினம் வெள்ளிக்கிழமை(21) நாடளாவிய ரீதியில் அனைத்து பொலிஸ் திணைக்களங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் நடத்தப்பட்டன.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயசூரியவின் சிந்தனைக்கமைவாக நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்ற நிகழ்வின் கீழ் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனையின் கீழ் தேசிய பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வு மட்டக்களப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

1864ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் இன்று வரையான காலத்தில் சுமார் 5,759 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்ட நிலையில், அவர்களை நினைவு கூரும் நிகழ்வாக தேசிய ரீதியில் வருடந்தோறும் மார்ச் மாதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆரம்ப நிகழ்வாக பொலிஸ் திணைக்கள கொடியேற்றப்பட்டு இறந்தவர்களுக்கான மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 12 பொலிஸ் பிரிவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவுகளால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவு



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

மண்முனைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் மண்முனைப்பற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளருமான ஏ.ஏ.மதீன் தலைமையிலான ஆதரவாளர்கள் மற்றும் முக்கிய செயற்பாட்டாளர்கள் தேசிய மக்கள் சக்தியோடு சனிக்கிழமை(22) மாலை இணைந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மண்முனைப் பற்று அமைப்பாளர் மதீன் தலைமையில் காங்கேயனோடை கிராம அபிவிருத்தி அமைப்பு சங்க மண்டபத்தில் மேற்படி வைபவம் இடம்பெற்றது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மண்முனைப்பற்றில் அரசாங்கத்தைப் பலப்படுத்தி உள்ளூராட்சிமன்ற அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த இணைவு நடைபெற்றமை சிறப்பம்சமாகும்.

மேற்படி வைபவத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எம். அப்துல்லா, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் யூ.எல்.எம்.என். முபீன், தேசிய மக்கள் சக்தியின் மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.எம்.ஏ.நசீர், காத்தான்குடி நகர சபை தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களான பொறியியலாளர் பலுலுல் ஹக். எம்.நஜிம் மற்றும் எம்.எம்.றம்ஸி உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். எதிர்காலத்தில் மண்முனைப்பற்று பிரதேசம் சார்ந்து எடுக்கப்பட வேண்டிய பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

# மாவனெல்லை பிரதேச சபை வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

எம்.எஸ்.அமீர் ஹுசைன்

மாவனெல்லை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையானது அநீதியானதாகும். சரியான முறையில் ஆவணங்கள் இருந்தபோதும் உரிய முறையில் அவை பரிசீலனை செய்யப்படாமல் நிராகரிக்கப் பட்டிருக்கின்றது. அதனால் சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கேகாலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரும் அதன் தேசிய செயலாளர் நாயகமுமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு மாவனெல்லை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அக்கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் 07 பிரதேச சபைகளுக்கு 08 பிரதான அரசியல் கட்சிகளாலும் ஒரு சுயேச்சைக்குழு வாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதனால் இந்தப் பிரதேச சபைகளுக்கான தேர்த லில் பிரதான அரசியல் கட்சிகளது வேட்பாளர்கள் இல்லாமல் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. மாவனெல்லை, கேகாலை, ரம்புக்கனை, அரநாயக்க, யட்டியந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய மற்றும் ருவன்வெல்ல ஆகிய பிரதேச சபைகளுக்கு போட்டியிட சமர்ப்பிக் கப்பட்ட வேட்புமனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.


ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜன அரகலய கூட்டணி, ஐக்கிய இடதுசாரி முன்னணி, பொதுஜன பெரமுன, தெவன பரபுர பக்ஷய ஆகிய கட்சிகளாலும் சுயேச்சைக் குழு ஒன்றினாலும் வேட்பு மனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன. வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் கடைசி தினமாக 2025.03.20ஆம் திகதி அந்தந்த மாவட்ட செயலகங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் அவ ற்றில் காணப்பட்ட ஒரு சில குறைபாடுகள் காரணமாக இவ்வாறு நிராகரிக்கப்பட வேண்டி ஏற்பட்டதாக தேர்தல் செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதில் குறிப்பாக மாவனெல்லை பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராக ரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நபீல்கான் மரிக்கார் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட சுயேச்சைக்குழு வேட்புமனுவும் நிராக ரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சில வேட்பாளர்களது பிறப்பு அத்தாட் சிப்பத்திரம் மற்றும் பதிவுத் தொடர்பான குளறுபடிகள் காரணமாகவே தேர்தல் சட்டவிதிகளின்படி இத்தகைய வேட்பு மனுக்கள் அதிகாரிகளால் நிராகரிக்கப் பட்டுள்ளன.

மாவனெல்லை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்புமனு தகுந்த காரணம் இன்றி நிராகரிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் மாவனெல்லை அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவிக்கின்றார்.

பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் குறைபாடு என்ற காரணத்தை காட்டி வேட்புமனுவை தள்ளுபடி செய்தாலும் தேர்தல் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அங்கீகரிக்கத்தக்க ஆவணங்களுடன் உரிய முறையில் சமர்ப்பித்தபோதும் அவை உரிய முறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப் பட்டமையானது தமது கட்சிக்கு இழைக் கப்பட்ட பாரிய அநீதியாகும் என்பதால் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று 24ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடுகளை செய்திருப்பதாக அவர் கூறினார்.

# புதிதாக கட்டப்பட்ட கட்டடம்; தையிட்டியில் மீண்டும் சர்ச்சை



பு.கஜிந்தன்

தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், அநுர அரசின் அனுமதி யோடு மீண்டும் ஒரு சட்டவிரோத கட்டடம் தையிட்டியில் கட்டப்பட்டு நேற்று (23) திறப்பு விழா நடத்தப்படுகிறது.

அனுமதியின்றி புதிதாக கட்டப்பட்டு நேற்று திறப்புவிழா செய்யப்படுகின்ற கட்டடத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், காணியின் உரிமையா ளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பியூமி ஹன்சமாலியை பணமோசடி தடுப்புச் சட்டத்தில் விசாரிக்க உத்தரவு

மொடல் அழகி பியூமி ஹன்ச மாலியை பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க, சட்ட விரோத சொத்துகள் புலனாய்வுப் பிரிவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹன்சமாலியின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை (21) கொழும்பு கூடுதல் நீதவான் மஞ்சுள ரத்நாயக்க முன் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஹன்சமாலிக்கு அதிக விலைக்கு ஆடம்பர அழகுசாதனப் பொருட் களை விற்பனை செய்வதில் தொடர்பு இருப்பதாகவும் 2023 நவம்பரில் கைதுசெய்யப்பட்ட ஒரு பெரிய போதைப்பொருள் கடத்தல்காரருடன் தொடர்பு இருக்கலாம் என்றும் சட்டவிரோத சொத்துகள் புலனாய்வுப் பிரிவின் தலைமை ஆய்வாளர் சம்பத் ராஜகருணா நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

ஹன்சமாலியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் சட்டத்தரணி சுமுது ஹேவகே, தனது வாடிக்கையாளர் ஒரு முறையான அழகுசாதனப் பொருள் வணிகத்தை நடத்தி வருவதாகவும் 34 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்க ளுக்கு கொரியர் மூலம் விற்பனை செய்வதாகவும் தெளிவுபடுத்தினார். ஹேவகே விலைகளை உயர்த்திய தாக குற்றம் சாட்டும் ஊடக அறிக்கைகளை மறுத்தார். மேலும் இந்தக் குற்றச்சாட்டுகள் அவரது வணிகத்துக்கு தீங்கு விளைவித்ததாகவும் இதனால் வாடிக்கையாளர்கள் பின்வாங்கியதா கவும் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட கடத்தல்கார ருடன் தொடர்புடைய ஹன்சமாலி யின் சொகுசு கார், சட்டவிரோதப் பொருட்களின் விற்பனையுடன் தொடர்புடையதா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவரது வணிகம் மூலம் அழகு சாதனப் பொருட்கள் அல்லது சட்டவிரோதப் பொருட்கள் விற் கப்படுகிறதா என்பதைக் கண்டறிய மேலும் விசாரணை அவசியம் என்றும் தலைமை பொலிஸ் ஆய்வாளர் வாதிட்டார்.

விசாரணையின் செல்லுபடியை ஒப்புக்கொண்ட நீதவான் ரத்நாயக்க, ஹன்சமாலியின் வணிகத்துக்கு தேவையற்ற தீங்கு விளைவிக்காமல் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்படுவதை பொலிஸார் உறுதிசெய்ய வேண் டும் என்றும் வலியுறுத்தினார். விசாரணையின் முன்னேற்றம் குறித்து உரிய நேரத்தில் நீதி மன்றத்துக்குத் தெரிவிக்க நீதிமன் றம் பொலிஸாருக்கு அறிவுறுத்தி யுள்ளது.

# வெளிநாட்டு செய்திகளை அறிக்கையிடும் ஊடகர்களிடையே தொழில் தொடர்பை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்





சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடக நிறுவனங் களில் வெளிநாட்டு செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுடன் தொழில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக விசேட கலந்துரையாடல் அண்மையில் (20) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ரமிந்து பெரேரா "வெளி நாட்டு அரசியலில் ஊடகத்தின் பங்களிப்பு" எனும் தலைப்பில் அறிமுக உரையை வழங்கினார்

இலங்கை சுற்றுலா கைத்தொழில் முன்னேற் றுதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றுக்காக வெளிநாட்டு ஊடகங்களை பயன்படுத்துதல் தொடர்பாக இங்கு மிகவும் அவதானம் செலுத்தப்பட்டதுடன் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் இதன்போது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

அவ்வாறு வெளிநாட்டு பொழுதுபோக்குத் தன்மையுடனான செய்திகளில் வரையறை இன்றி அரசியல், பொருளாதார, சமூக பகுப்பாய்வு போன்றவற்றை அறிக்கைகளாக முன்வைக்கும் சந்தர்ப்பங்கள் குறித்து அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார இங்கு தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்காக செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள இலங்கையின் சிரேஷ்ட ஊடகவி யலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# யாழில் டீசலை அருந்திய ஒன்றரை வயது குழந்தை பரிதாபமாக உயிரிழப்பு!

பு.கஜிந்தன்

யாழில் டீசலை அருந்திய ஆண் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் (22) அதிகாலை உயிரிழந்துள்ளது. ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கு பகுதியைச் சேர்ந்த சதீஸ் ரஞ்சித் என்ற ஒரு வயது 09 மாதங்கள் நிரம்பிய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 18ஆம் திகதி குழந்தையின் தந்தை லான்ட்மாஸ்டர் திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளார். பின்னர் டீசலை ஒரு போத்தலில் வைத்துவிட்டு சென்றுள்ளார்.

இதன்போது அவ்விடத்துக்கு வந்த குழந்தை சோடா என நினைத்து டீசலை அருந்தியுள்ளது. இந்நிலையில் குழந்தை மயக்கமுற்றது. பின்னர் குழந்தை ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (22) அதிகாலை 2.30 மணியளவில் உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# உலக வங்கியின் 2025 பூகோள டிஜிட்டல் மாநாடு

## இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட பிரதமரின் செயலர்



உலக வங்கியின் 2025 பூகோள டிஜிட்டல் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் கலந்துகொண்டார்.

'அனைவருக்குமான டிஜிட்டல் பாதை' எனும் தொனிப்பொருளின் கீழ் வொஷிங்டன் டீ.சீயில் உலக வங்கியின் தலைமையகத்தில் மார்ச் 17ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை உலக வங்கி குழுமத்தின் 2025 பூகோள டிஜிட்டல் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரீ கலந்துகொண்டார்.

இந்த மாநாடு டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் பொருளாதார, சமூக அபிவிருத்தியை முன்னோக்கிக் கொண்டு செல்வது மற்றும் அதன் பங்கினை ஆராயும் நோக்கில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிட்டல் மயப்படுத்தல் செயற்பாடுகளுக்கென இந்த மாநாடு மிகவும் முக்கியமானதாகும். இலங்கையின் நிரந்தர டிஜிட்டல் பரிணாமத்தை முன்னிட்டு வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் உபாய மார்க்கங்கள் தொடர்பில் பூகோள நிபுணர்களுடன் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரீ தனது கருத்துகளைப் பரிமாற்றிக்கொண்டார்.

பூகோள டிஜிட்டல் மாநாட்டுக்கு இணைவாக, சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கியின் பிரதம அதிகாரிகளுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்ட பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரீ, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன், சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.கே.ஜீ.ஹரிச்சந்திர உள்ளிட்டவர்களையும் சந்தித்தார்.

இலங்கையின் விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன் 2025 பெப்ரவரி மாதத்தில் EFF இன் கீழ் மூன்றாவது மீளாய்வினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் IMF நிறைவேற்றுக் குழுவின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணிக்குழு வழங்கிய ஒத்துழைப்புக்கு பிரதமரின் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள EFF மீளாய்வின் மைல்கல்லை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்குமென பிரதமரின் செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

பாதிப்புக்குள்ளாகும் சமூகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்குதல், வரி செயன் முறையின் செயற்றிறனை மேம்படுத்தல் மற்றும் முழு பொருளாதார பயன்களையும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட அரசின் தொடர்ச்சியான டிஜிட்டல் மயப்படுத்தல் முயற்சிகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கு உலக வங்கி வழங்கும் பூரண ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்து, உலக வங்கியின் தெற்காசிய வலயத்துக்கான உப தலைவர் மார்டின் ரய்சருடனும் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரீ கூட்டமொன்றில் பங்கேற்றிருந்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டு வருவது மற்றும் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கென உலக வங்கியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு பெற்றுக்கொடுக்கப்படுமென ரய்சர் இதன்போது உறுதியளித்தார்.

நாட்டின் நீண்டகால ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கென தொடர்ச்சியான நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் தேவைப்படும் ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

# தமிழ்நிதி அருணா செல்லத்துரையின் இராவணனார் - தெய்வீக மானிடர் லங்கா பாங்கு வரலாறு நூல் அறிமுகம்



மன்னார் நிருபர்

'இராவணனார் நூல் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (22) பிற்பகல் 02 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) - மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய தலைவர், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட் டதைத் தொடர்ந்து நூல் அறிமுக உரையை ஸ்ரீஸ்கந்தகுமார் வழங்கி னார்.

நூல் நயவுரை பண்டிதர் திருமதி ஏ.சஜானா வழங்கினார். நூலாசிரியரால் நூல் பற்றிய விளக்கமும் கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்றது.

# பதுளை மாவட்டத்தில் 09 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

பசறை நிருபர்


உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் காக பதுளை மாவட்டத்தில் 144 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப் பட்டிருந்த நிலையில், 09 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக பதுளை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன தெரிவித்தார்.


இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் 14, சுயேச்சை குழுக்கள் 11 உள்ளூராட்சி தேர்தலுக்காக பதுளை மாவட்டத்தில் உள்ள 18 உள்ளூராட்சி மன்றங்களுக்காக வேட்புமனு பத்திரங்களை தாக்கல் செய்திருந்தன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு பத்திரங்களில் சர்வசன அதிகாரம் கட்சி ஹாலி-எல, பசறை, ரிதிமாலியத்த ஆகிய பிரதேச சபைகளுக்காக தாக்கல் செய்த வேட்புமனு பத்திரங்களும் ஜனசெத பெரமுன பண்டாரவளை மாநகர சபைக்காக தாக்கல் செய்த வேட்புமனு பத்திரமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊவா பரணகம, வெளிமடை ஆகிய பிரதேச சபைகளுக்காக தாக்கல் செய்த வேட்புமனு பத்திரங்களும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மலையக மக்கள் முன்னணி பதுளை பிரதேச சபைக்காக தாக்கல் செய்த வேட்புமனு பத்திரங்களும் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏனைய 135 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.







பாகிஸ்தான் நாட்டின் 86ஆவது தேசிய தினம் நேற்று (23) அனுஷ்டிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பாஹிமுல் அசீஸ் தேசியக் கொடி ஏற்றிவைத்தார். அத்துடன் பாகிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் தேசிய தின செய்திகள் செயலாளர்களினால் வாசிக்கப்பட்டன. அத்துடன் இலங்கை வாழ் பாகிஸ்தானியர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

படங்கள்: அஷ்ரப் ஏ சமத்

# தெற்கு ஆசியாவில் முதல் AI இயக்க MRI ஸ்கேனரை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் நவலோக



இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குநரான நவலோக மருத்துவமனை, தெற்கு ஆசிய சுகாதாரத் துறையில் AIஆல் இயக்கப்படும் முதல் MRI ஸ்கேனர் இயந்திரத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இது நாட்டின் சுகாதாரத் துறையில் மற்றொரு முக்கியமான மைல்கல்லாகும். கடந்த மார்ச் 18ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அதிநவீன அமைப்பு, சுகாதாரக் கண்டுபிடிப்புகள் மற்றும் மேம்பட்ட நோயாளர் பராமரிப்பில் ஒரு முன்னோடியாகத் தனது சிறப்பை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்த நவலோக மருத்துவமனை வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளது.

# ஜனவரி மாதத்தின் 'Cash Bonanza' வெற்றியாளருக்கு ரூ.1,000,000ஐ பரிசளித்த SLT-MOBITEL




தொலைத்தொடர்பாடல் துறையில், இலங்கையின் மாபெரும் வாடிக்கையாளர் வெகுமதித் திட்டமாக அறியப்படும், SLT-MOBITELஇன் 'Cash Bonanza' திட்டத்தின் ஜனவரி மாத வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த R.யஜிந்தனுக்கு SLT-MOBITEL ரூ.1,000,000 பெறுமதியான பணப்பரிசை அன்பளிப்புச் செய்தது.

இந்த அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு அன்மையில் மொபிடெல் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் SLT-MOBITELஇன் பிரதம செயற்பாட்டு அதிகாரி, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் பிரதிப் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# Sonet காம்பாக்ட் SUVயை அறிமுகப்படுத்திய KIA




KIA நிறுவனமானது இன்று இலங்கையின் வாகனத்துறையில் முற்றிலும் புதிய Sonet காம்பாக்ட் SUVயை அறிமுகப் படுத்தியதன் மூலம் மீண்டும் புதியதோர் பிரகாசத்தை ஏற்படுத் தியுள்ளதுடன் இது வாகன இறக்குமதி மீண்டும் தொடங்கப்பட்டது தொடர்பாக நாட்டில் நிலவும் உற்சாகத்தையும் பன்மடங்காக்கியுள்ளது.

KIA வால் இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட 12 புதிய SUV மொடல்களில் இது முதன்மையானதென்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் சிறந்த முதல் தர நேர்த்தியான, நகரங்களுக்கான SUVகளில் ஒன்றாக மதிப்பிடப்பட்ட Kia Sonet, 30க்கும் மேற்பட்ட முதல் தர அம்சங்களுடன் புதிய அளவுகோல்களை அமைக்கிறது, அத்துடன், இது மேலும் தொழில்நுட்ப ஆர்வலர்கள், ஆர்வமுள்ளவர்கள் மற்றும் சமூக ரீதியாக மிகவும் இணைக்கப்பட்ட ஒரு தலைமுறையை இலக்காகக் கொண்டதென்று நாட்டின் முன்னணி வாகன உற்பத்தியாளரான Kia தெரிவித்துள்ளது.

# 'அல்-பலாஹ் வகாலா ஃபியூச்சர்-கேஷ்' ஐ அறிமுகப்படுத்தும் LOLC





இலங்கையின் மாற்று நிதித் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான LOLC அல்-பலாஹ், வணிக நிதியுதவியை மாற்றியமைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஃபேக்டரிங், இன்வாய்ஸ் மற்றும் காசோலைகள் தள்ளுபடி வசதிக்கான முன்னோடியான ஷரியாவுக்கு இணங்குவதற்கான முன்னோடியான 'அல்-பலாஹ் வகாலா ஃபியூச்சர்-கேஷ்' ஐ அறிமுகப்படுத்தியதை பெருமையுடன் அறிவிக்கிறது. நெறிமுறையான நிதிக் கொள்கைகளைப் பின்பற்றும் அதேவேளை, நிகழ்காலத்தில் எதிர்கால பணப்புழக்கங்களை உயர்த்தவும் உணரவும் இந்த அற்புதமான நிதித் தீர்வு வணிகங்களுக்கு அதிகாரமளிக்கிறது. இலங்கையின் இஸ்லாமிய நிதிச் சேவைத் துறையில் ஒரு புதிய அளவுகோலை அமைத்து, இந்த முயற்சியானது LOLC அல்-பலாஹ்வின் மாற்று நிதித்துறையில் புத்தாக்கம் மற்றும் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

பெறத்தக்கவைகளுக்கு எதிரான வட்டி-அடிப்படையிலான வருமானத்தை நம்பியிருக்கும் வழக்கமான காரணியைப் போலன்றி, LOLC அல்-ஃபலாஹ்வின் 'வகாலாஹ் ஃபியூச்சர்-கேஷ் டுடே' தயாரிப்பு, இஸ்லாமிய பொருளாதார நீதித்துறையுடன் முழுமையாக இணங்குவதை உறுதிசெய்து, 'வகாலா-பில்-இஸ்தித்மர்' கருத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரியின் மூலம், LOLC அல்-பலாஹ், வட்டி அடிப்படையிலான பரிவர்த்தனைகளை நீக்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலாப வருமானத்துக்கு (APR) ஈடாக வணிக நடவடிக்கைகளுக்கு மூலதன உட்செலுத்தலை வழங்குகிறது.

# சிறந்த செயற்திறனை வெளிப்படுத்தியவர்களை அங்கீகரித்ததுடன் மூலோபாயத் திட்டத்தையும் வெளியிட்ட செரண்டிப் கோதுமை மா ஆலை




நாட்டுக்கு போஷணையளிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ள இலங்கையின் உணவுத் தயாரிப்புத் துறையின் முன்னணியாளரான செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தனது வருடாந்த விற்பனை மாநாடு 2025 ஐ அண்மையில் நடத்தியது. நாடளாவிய ரீதியில் உள்ள நிறுவனத்தின் விற்பனை சக்தியை ஒன்றிணைத்து சிறப்பாக செயற்பட்டவர்களை அங்கீகரிப்பதற்கும் எதிர்வரும் ஆண்டுக்கான மூலோபாய திட்டத்தை வெளியிடும் நோக்கிலும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2024ஆம் ஆண்டில் நிறுவனம் அடைந்த வெற்றிகள் குறித்து விரிவான மதிப்பாய்வு மற்றும் 2025ஆம் ஆண்டுக்கான மூலோபாய முயற்சிகள் குறித்த விபரங்கள் அடங்கிய விரிவான விளக்கமும் இந்நிகழ்வில் முன்வைக்கப்பட்டன.

இந்த மாநாட்டின் மூலம் செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் வெற்றிகளைக் கொண்டாடியதுடன், 2025 ஆம் ஆண்டில் புதிய உயரங்களை எட்டுவதற்குப் பலமான அணியை உருவாக்கும் ஒரு அடித்தளத்தையும் ஏற்படுத்தியது.

# 30ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் 'குமாரிகா'




கூந்தல் பராமரிப்பில் இயற்கையான தரம் மற்றும் புத்தாக்கத்துக்கான குமாரிகா, அதன் 30ஆவது வருட நிறைவைக் கொண்டாடுகிறது. 1995 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது முதல், இந்த வர்த்தகநாமம் உள்நாட்டுத் தெரிவாக இருந்து தற்போது சர்வதேசத்திலும் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. அதன் தனித்துவமான ஹெயார் ஒயில், ஷாம்பு, கண்டிஷனர்கள் உள்ளிட்ட பல்வேறு தயாரிப்பு வகைகள் மூலம உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நுகர்வோரைக் கவர்ந்துள்ளது. குமாரிகா 15 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஏற்றுமதி செய்யப்படுவதுடன் உலகம் முழுவதும் பல்வேறு சந்தைகளை தொடர்ச்சியாக கைப்பற்றி வருகிறது. இந்த வர்த்தக நாமம் இலங்கையின் ஒரு வீட்டுப் பெயர் மாத்திரமல்லாது, உலகளாவிய ரீதியில் தேசிய விசேடத்து வத்துக்கு புகழ்பெற்ற இலங்கையின் தூதுவராகவும் திகழ்கின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் நம்பகமான வீட்டுப் பெயராக குமாரிகா இருந்து வருகிறது. கூந்தல் பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்தும் தொலைநோக்குப் பார்வையுடன் நிறுவப்பட்ட குமாரிகா, அதன் பின்னர் தலைமுறை தலைமுறையாக தினசரி அழகுபடுத்தும் நடவடிக்கைகளில் ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளதோடு, மேன்மை மற்றும் பாரம்பரியத்தைப் பேணும் அழகையும் வழங்க உறுதிபூண்டுள்ளது. அது மாத்திரமன்றி, 2025 ஆம் ஆண்டு டுபாய், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியாவில் இடம்பெறும் புகழ்பெற்ற அழகுக் கண்காட்சியான Beautyworld நிகழ்விலும் குமாரிகா பங்கேற்கிறது. இந்த உணர்வானது மில்லியன் கணக்கான இலங்கையர்களின் எண்ணத்தை எதிரொலிப்பதோடு, இந்த வர்த்தகநாமத்தை ஒரு கலாசார சின்னமாகவும் கூந்தல் பராமரிப்புத் துறையின் தரத்தின் அளவுகோலாகவும் நிலைநிறுத்தியுள்ளது.

# சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவித்த யூனியன் அஷ்யூரன்ஸ்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குனரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது பெருமைக்குரிய தேசிய வியாபார அறிமுக நிகழ்வில் நிறுவனத்தில் சிறப்பாக செயலாற்றியிருந்த ஆலோசகர்களைக் கௌரவித்திருந்தது. Monarch Imperial இல் 'Rise to Brilliance' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதன் முகவர் செயலணியின் 500 க்கும் அதிகமான அங்கத்தவர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதன் சிறப்பைக் கொண்டாடுவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக தேசிய வியாபார அறிமுக நிகழ்வில் மாபெரும் விருது வழங்கும் நிகழ்வு அடங்கியிருந்தது. இதன்போது சிறந்த பாரிய பிராந்திய பிரிவுக்கான விருதை மொரட்டுவ பிராந்தியமும் சிறந்த நடுத்தர பிராந்திய பிரிவு விருதை ஹோமாகம பிராந்தியமும் சிறந்த சிறிய பிராந்திய பிரிவு விருதை மல்சிறிபுர பிராந்தியமும் பெற்றுக்கொண்டன. விருதுகள் வழங்கிக் கௌரவிக்கும் இரவின் சிறந்த வெற்றியாளர்களில் ஹோமாகம பிராந்தியத்தின் செதீஷா டயஸ், 'தேசிய வெற்றியாளர்' எனத் தெரிவுசெய்யப்பட்டார். சிறப்பை நோக்கிய நிறுவனத்தின் பயணத்தில் முக்கிய மைல்கல் சாதனையை இவர் பதிவு செய்திருந்தார்.

# The Impossible Shot - வனவிலங்கு புகைப்படக்கலை மற்றும் கதைசொல்லல்



வனவிலங்கு செல்வத்தின் அழகிய அம்சங்களை வெளிப்படுத்தும் விதமாக Cinnamon Nature Trails மற்றும் Cinnamon Life இன் ஏற்பாட்டில் உலகப் புகழ்பெற்ற வனவிலங்கு புகைப்படக் கலைஞர் மற்றும் இயற்கை பாதுகாப்பு நிபுணரான Paul Goldstein கலந்துகொள்ளும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி எதிர்வரும் ஏப்ரல் 06ஆம் திகதி Cinnamon Life இல் நடைபெறவுள்ளது. 'The Impossible Shot' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் சிறப்பு நிகழ்ச்சி பற்றிய ஊடக சந்திப்பு அண்மையில் Cinnamon Life இல் நடைபெற்றது.

படைப்பாற்றல் மற்றும் விழிப்புணர்வுக்கு அப்பால் "The Impossible Shot" நிகழ்ச்சி இலங்கையின் வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும், நிலையான சுற்றுலாவை ஊக்குவிப்பதிலும் Cinnamon Nature Trails இன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டையும், கலைகள் மற்றும் புகைப்படத்தை ஆதரிப்பதில் Cinnamon Life இன் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

"The Impossible Shot" நிகழ்ச்சிக்கான டிக்கெட் விலை



ரூபாய் 7,500/- ஆகும், மேலும், இந்த டிக்கெட்டுகள் இம்மாதம் 16ஆம் திகதி முதல் www.cinnamonboxoffice.com இல் இருந்து முன்பதிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரமழான் வாரத்தை முன்னிட்டு கொழும்பில் கலை - கலாசார நிகழ்வுகள்










அஷ்ரப் ஏ.சமத்

மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப்பின் ஏற்பாட்டில் ரமழான் வாரத்தை முன்னிட்டு கொழும்பில் கலை, கலாசார நிகழ்வுகள் கொழும்பு கிறீன்பாத்தில் நடைபெற்றன.

அதனை முன்னிட்டு அதனை அண்டியுள்ள கொழும்பு கிறீன் பாத் ஸ்ட்ரீட் முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களது உணவுக் கடைகள் உள்ளன. இதனை நேற்று மேல் மாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஸலாம் ரமழான் உறுப்பினர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர்,

''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆலோசனையின் பேரில் இத்திட்டம் முதன் முதலாக கொழும்பில் மாகாண மட்டத்தில் முஸ்லிம்களின் நோன்பு மாத காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் கலை, கலாசாரம், முஸ்லிம், மலே,போரா, மேமன் இனங்களின் சிறிய உணவு,கோப்பி, கலாசார உடைகள் காட்சிப்படுத்தப்பட்டு ஏனைய இனங்களும் இதில் கலந்துகொள்ள முடியும். இதைப் போன்று வெசாக், கிறிஸ்மஸ், தீபாவளி நிகழ்வுகளும் எதிர்காலத்தில் கொண்டாப்படுமென ஆளுநர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சர்வமதப் பிரதிநிதிகள், இவ்வமைப்பின் அங்கத்தவர்கள், தலைவர் நிசாம், அமான் அஷ்ரப், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், புரவலர் ஹாசிம் உமர், மேல்மாகாண சபை அதிகாரிகள் கலந்துகொண்டதுடன் இப்தார் நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.


Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# காஸா மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துக!

## இஸ்ரேலிடம் பாப்பரசர் வலியுறுத்து

‘‘காஸாவில் தாக்குதல் நடத்துவதை இஸ்ரேல் உடனடியாக நிறுத்தவேண்டும்’’ என பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

உடல்நிலை சீரானநிலையில் வைத்தியசாலையிலிருந்து நேற்று வத்திக்கானுக்கு திரும்பியுள்ள பாபரப்பரசர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது,

காஸா முனையில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியதால் ஏராளமான உயிரிழப்புகளும் காயங்களும் ஏற்பட்டதைக்கண்டு கவலையடைந்தேன். உடனடியாக ஆயுதங்கள் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, அனைத்து பணயக் கைதிகளையும் விடுவித்து உறுதியான போர் நிறுத்தத்தை எட்டுவதற்கு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

காஸாமுனையில் மனிதாபிமான சூழ்நிலை மீண்டும் மோசமாகியுள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் இதற்கு தீர்வு காணவேண்டும்’’ எனத் தெரிவித்துள்ளார்.



# காஸா மீதான தாக்குதலை தீவிரப்படுத்திய இஸ்ரேல்

## இதுவரை 50,021 பலஸ்தீனர்கள் பலி



காஸாமீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50,000ஐ கடந்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் காஸாமீது நேற்று(23) 24 மணிநேரத்துக்கு மேற்கொண்ட தாக்குதல்களில் 45க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் இதுவரை 50,021க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1,13,274க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஹமாஸ் அரசியல் தலைவர்**

காஸா மோதல் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஹமாஸ் அரசியல் தலைவர் சலா அல் -பர்தவீல் (Salah al-Bardawil) மற்றும் அவரது மனைவி கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காஸாவில் பல்வேறு இடங்களில் இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தி வருகிறது. வடக்கு காஸா, காஸா நகரம் மற்றும் டெய்ர் அல் - பலா, கான் யூனிஸ் மற்றும் காஸா முனையின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளிலும் ரஃபா நகரிலும் இஸ்ரேல் விமானங்கள் வான்தாக்குதல்கள் நடத்திவருகின்றன.

ஏற்கனவே, ஹமாஸ் அமைப்பின் முக்கிய நிர்வாகியான முகமது அபு வட்பாவும் உயிரிழந்துள்ளார். தொடர்ந்து, ஹமாஸ் தலைவர்களை இஸ்ரேல் குறி வைத்து தாக்குதல் நடத்தி வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி திடீரென இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இஸ்ரேலியர்கள் 1,139 பேர் கொல்லப்பட்டதுடன் 200க்கும் மேற்பட்டோரை ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹமாஸ் படைகளைக் குறிவைத்து காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்கா, எகிப்து, கட்டார் முன்னிலையில் இரு தரப்பினருக்கும் இடையே கடந்த ஜனவரி 19 முதல் ஆறு வாரங்களுக்கு போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது. அப்போது ஹமாஸ் பிடியிலிருந்த 33 பணயக் கைதிகளும் இஸ்ரேல் சிறையிலிருந்த சுமார் 1,900 பலஸ்தீன கைதிகளும் பரிமாறிக்கொள்ளப்பட்டனர். எனினும், காஸாவிலுள்ள இஸ்ரேலைச் சேர்ந்த பணயக்கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

இதனிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் படையினர் முறையாக கடைபிடிக்கவில்லை எனத் தெரிவித்து காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், தங்களிடம் உள்ள பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவிக்காவிட்டால் காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படாதென்பதை தெளிவுபடுத்தியுள்ள இஸ்ரேல், காஸா முனையில் தாக்குதல்களை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது.

அதையடுத்து, காஸா முழுவதும் இஸ்ரேல் இராணுவம் திங்கட்கிழமை முதல் தீவிர தாக்குதல் நடத்திவருகிறது. போர் நிறுத்த முறிவுக்குப் பின்னர் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மட்டும் சுமார் 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

**லெபனான்மீதும் தாக்குதல்**

இஸ்ரேலுடன் எல்லையைப் பகிர்ந்துவரும் லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லாஹ் படையினர், ஹமாஸுக்கு ஆதரவாக இஸ்ரேலின் எல்லைப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தினர். தற்போது ஹிஸ்புல்லாஹ் நிலைகளைக் குறிவைத்து லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

தெற்கு லெபனானின் டௌலைன் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நேற்று (சனிக்கிழமை) இரவு நடத்திய தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 06 பேர் பலியாகினர். 10க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

**ஐரோப்பிய நாடுகளில் வலுக்கும் போராட்டம்!**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தி ஐரோப்பிய நாடுகளில் போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

லண்டன், ஸ்பெயின்ஸ், பிரான்ஸ், ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான மக்கள் அந்நாட்டுக் கொடிகளை ஏந்தி தூதரகங்களை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்பெயினின் சான் செபாஸ்டியன் நகரில், ‘‘பலஸ்தீன மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்’’ என்ற கோரிக்கையை எழுப்பியவாறு மக்கள் பேரணியில் ஈடுபட்டனர்.

அதேபோன்று பலஸ்தீன கொடிகளை ஏந்தியவாறு பிரான்ஸில் இசை வாத்தியங்கள் முழங்க மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேபோன்று லண்டனிலும் ஏராளமான மக்கள் கூடி முழக்கங்களை எழுப்பிப் போராடினர். ‘‘இஸ்ரேலுக்கு ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும்’’ என்று தூதரகத்தை அவர்கள் முற்றுகையிட்டனர்.

ஸ்வீடனிலும் வீதிகளில் குவிந்த மக்கள் காஸா மக்களுக்கு ஆதரவாக பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## உடல்நிலை சீரானது:

# வத்திக்கான் திரும்பினார் பாப்பரசர் பிரான்சிஸ்



கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸின் உடல்நிலை சீராக இருப்பதாக வைத்தியர்கள் அறிவித்துள்ள நிலையில் அவர் நேற்று (23) வைத்தியசாலையிலிருந்து வத்திக்கானுக்குத் திரும்பியுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸுக்கு (வயது 88) சுவாசக் கோளாறு ஏற்பட்டநிலையில் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி ரோம் நகரிலுள்ள ஜெமிலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தொடர்ந்து 38 நாட்களாக வைத்தியசாலையில் இருந்தவாறு சிகிச்சைப்பெற்று வந்த அவர், நேற்று வைத்தியசாலையிலிருந்து திரும்பியுள்ளார்.

நுரையீரல் இரண்டிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டிருந்த நிலையில், அவருக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்தன. வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்தபோது இருமுறை உயிருக்கு ஆபத்தான கட்டத்தை பாப்பரசர் சந்தித்தார். எனினும் வெண்டிலேட்டருக்கு மாற்றப்பட்டு அதன் உதவியுடன் அவர் சுவாசித்து வந்தார்.

தற்போது அவரது உடல்நிலை குறித்து பேசிய ஜெமிலி மருத்துவமனை இயக்குநரும் வைத்தியருமான செர்ஜியோ அல்ஃபெய்ரி,

பாப்பரசரின் உடல்நிலை சீராகவுள்ளது. அவர் இன்று (நேற்று) வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்புகிறார். எனினும் அவர் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டும்’’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

வத்திக்கானிலுள்ள தனது இல்லத்துக்குத் திரும்புவதற்கு முன்னர் ஜெமிலி வைத்தியசாலையில் இருந்தவாறு பாப்பரசர் ஆசீர்வாதம் வழங்கினார்.

## கியூபா உட்பட 04 நாடுகளைச் சேர்ந்த...

# ஐந்து இலட்சம் பேரை வெளியேற்றும் அமெரிக்கா

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 05 இலட்சம் பேரின் தற்காலிக அனுமதியை திரும்பப் பெற உள்நாட்டு பாதுகாப்புத்துறை முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் அந்நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவர்கள் கைது செய்யப்பட்டு அவரவர் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் கியூபா, ஹைதி, நிகரகுவா மற்றும் வெனிசுலா ஆகிய 04 நாடுகளைச் சேர்ந்த 05 இலட்சம் பேருக்கு வழங்கப்பட்ட தற்காலிக சட்டப்பாதுகாப்பை திரும்பப்பெற இருப்பதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறை அறிவித்துள்ளது. இதனால் இவர்கள் ஒரு மாதத்துக்குள் நாடு கடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத்துறை செயலாளர் கிரிஸ்டி நோயம் தெரிவிக்கையில்,

‘‘கடந்த 2022 முதல் கியூபா, ஹைதி, நிகரகுவா, வெனிசுலா ஆகிய 04 நாடுகளைச்சேர்ந்த 5,32,000 பேருக்கு வாபஸ் பெறும் உத்தரவு பொருந்தும். இவர்களுக்கு 02 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் ஏப்ரல் 24ஆம் திகதி அல்லது பெடரல் பதிவாளர் நோட்டீஸ் வெளியான 30 நாட்களுக்கு பின்னர் தங்கள் சட்டப் பாதுகாப்பை இழப்பார்கள்” - என்றார்.



அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்று ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ட்ரம்ப் உறுதியளித்தார். தற்போது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அவர் அதனை நடைமுறைப்படுத்தி வருகிறார். மேலும் புலம்பெயரும் தொழிலாளர்கள் அமெரிக்காவுக்கு வந்து தங்குவதற்கான சட்டப்பூர்வ வழிகளையும் அவர் அடைத்து வருகிறார்.

# கேரளாவில் ‘அறிவே கடவுள்’ கோவில்

## புத்தகமே தெய்வம் - பிரசாதம்

கேரளாவின் செருபுழா அருகே அமைந்துள்ள கோவிலில் புத்தகமே தெய்வமாக வணங்கப்படுகிறது. வழிபடும் பக்தர்களுக்கு புத்தகமே பிரசாதமாக வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

கேரளாவின் கண்ணனூர் மாவட்டத்தில் செருபுழா அருகே பிரபோயில் என்ற குக்கிராமத்தில் நவபுரம் மாதாதீத்த தேவாலயத்தில் புத்தகமே தெய்வமாக வணங்கப்படுகிறது. ‘உலகுக்குரிய கடவுளின் இல்லம்’ என்றும் பெயர் குறிப்பிடப்படும் இந்தக் கோவில், 2021ஆம் ஆண்டு மார்ச் 04ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. கல்லில் வடிக்கப்பட்ட புத்தகமே, மூலவராக இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

காசர்கோடு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்பி சந்தோஷ் மானசன் இந்த புத்தக மூலவரை வடிவமைத்துள்ளார். பக்தர்கள், மூலவரை வணங்கி, புத்தகங்களை காணிக்கையாக செலுத்தலாம். பிரசாதமாகவும் புத்தகமே வழங்கப்படுகிறது.

இங்கு அர்ச்சகர்கள் எவரும் இல்லை. உண்டியலும் இல்லை. அனைத்து சமுதாயத்தினரும் இங்கு வழிபாடு நடத்தலாம். கடவுளாக வழிபாடு செய்யப்படும் புத்தகத்தில், ‘‘அறிவே கடவுள்; மதம் என்பது பரந்த சிந்தனை; பணிவு கொண்ட அறிவே சிறந்த பாதை’’ என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.



இந்த கோவிலின் முன் மண்டபத்தில், சில ஆயிரம் புத்தகங்களை கொண்ட நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஏக்கரில் அமைந்துள்ள இந்த வளாகத்தில், 03 தங்கும் விடுதிகளும் உள்ளன. அவற்றில் எழுத்தாளர்கள் தங்கி தங்கள் எழுத்துப்பணியை மேற்கொள்ள அனுமதிக்கின்றனர்.

இந்தக் கோவில், பிரபோயில் நாராயணன் என்பவரது கனவில் உருவாகி உருப்பெற்றது. எழுத்தாளரான நாராயணன், 26 நூல்களை எழுதியுள்ளார். பகுதிநேர வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் புத்தக கோவிலை உருவாக்கியுள்ளார் நாராயணன்.

ஏப்ரல் மாதத்திலும் தசரா விடுமுறை நாட்களிலும் இங்கு கலாசார விழாக்கள் நடத்தப்படுகின்றன. இலக்கிய விவாதங்கள், பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், புத்தக வெளியீடுகள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. உலகில் புத்தகமே தெய்வமாக வழிபடப்படும் ஒரே கோவில் இதுதான் என்கின்றனர் உள்ளூர் மக்கள்.

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ள முல்லையில் தமிழரசுக் கட்சி கலந்தாலோசனை



**(விஜயரத்தினம் சரவணன்)**

உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்தினருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்குமிடையில் நேற்று முன்தினம் (22) கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரனின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல்களில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் அந்தந்தப் பிரதேச இலங்கைத் தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வதென்பது தொடர்பில் பேசப் பட்டதுடன், வேட்பாளர்கள் எவ்வாறு செயற்படவேண்டுமென்பது தொடர்பிலான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு, முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கைத் தமிழரசுக்கட்சி கைப்பற்றுவதற்கான வியூகங்களும் வகுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் நாடு திரும்பவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு

### வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு






**(பு.கஜிந்தன்)**

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் இலங்கைக்கு திரும்பவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புபவர்களுக்கான உதவிகளை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புகளிடம் கோரிக்கை முன்வைக்கப்படுமென வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (22) விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கமைவாக இது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர வேண்டும் என போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றதென்பதையும் அவர்கள் மீண்டும் இங்கு வரவேண்டுமென்பதே இங்குள்ள எல்லோரது விருப்பமென்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாகப் பூர்த்திசெய்ய வேண்டுமென்றும் ஆளுநர் தெரிவித்தார்.

ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் சின்னத்தம்பி சூரியகுமாரி, தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் எதிர்பார்ப்புத் தொடர்பிலும் விவரித்தார்.

இலங்கையிலிருந்து நான்கு கட்டங்களாக இந்தியாவுக்கு 03 இலட்சத்து 34 ஆயிரத்து 797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனரென்றும் தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58,104 பேர் இருக்கின்றனரென்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர். தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58,104 பேரில், 50,620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களென்றும் குறிப்பிட்டனர். 2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14ஆயிரத்து 531பேர் வருகை தந்துள்ளனரென்றும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். இலங்கை, இந்திய அரசாங்கங்களிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தேவை. இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு அவசியயெனவும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்கு சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இலங்கைக்கு நாடு திரும்புபவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால் இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும் அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டுவரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணமொன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம் வடக்கின் 05 மாவட்டச் செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் மேற்கொள்வார்களென ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கைநெறியை முடித்தவர்களெனவும் விளையாட்டுத்துறையில் சாதித்தவர்களெனவும் சுட்டிக்காட்டிய ஒபர் சிலோன் நிறுவனத்தினர், வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக்கூடாதெனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்துவரமுடியாதெனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

## மன்னார் - பெரியமடு பிரதான வீதியில் டிப்பர் விபத்து: ஒருவர் பலி — சாரதி கைது

**(ஜோசப் நயன்)**

மன்னார், பள்ளமடு பெரியமடு பிரதான வீதியில் நேற்று முன்தினம் (22) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் குறித்த டிப்பர் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

நேற்று முன்தினம் (22) அதிகாலை பெரியமடு பிரதான வீதியூடாகப் பயணித்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகிய நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த டிப்பர் வாகனத்தில் நால்வர் பயணித் துள்ளனர். இதன்போது பெரியமடு பகுதியைச் சேர்ந்த கே.சத்திய பிரபாகரன் (வயது-31) சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு, சாரதி உள்ளடங் களாக மூவர் காயமடைந்தனர்.

இந்நிலையில், குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது சாரதி மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தெரியவந்துள்ளது.

குறித்த வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு சகோதரர்களில் ஒருவர் வீடு திரும்பியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு கிராமங்களில் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றபோதிலும் பொலிஸார் அசமந்தப்போக்குடன் செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## பனைசார் உற்பத்தியாளர்களின் நிதி நெருக்கடியை போக்குவதற்கு பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை



**(சாவகச்சேரி நிருபர்)**

பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற நிதி நெருக்கடி நிலைமையைப் போக்குவதற்கு வங்கிகளூடாக அவர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கை யில்,

பதனீர் உற்பத்தியாளர்கள், கைப்பணியாளர்கள் உள்ளிட்ட பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் அண்மையில் வங்கிகளுடன் சந்திப்பொன்று மேற்கொள்ளப் பட்டது.

அதன் முதற்கட்டமாக இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி அதிகாரிகளுடன் தனித்தனியே பனை அபிவிருத்திச்சபை சந்திப்பை ஏற்படுத்தி சாதகமான முடிவையும் பெற்றுள்ளது.

இதன்போது பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற நிதித் தேவைகளுக்கான கடன் வசதிகளை வழங்க வங்கிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்தோடு, குறைந்த வட்டி விகிதத்தில் கடனைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக உற்பத்தியாளர்களுடைய நிதி நெருக்கடி நிலைமை தீர்க்கப்படுவதுடன், எதிர்கால தேவை கருதிய அதிக உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நடவடிக்கையை பனை அபிவிருத்திச்சபை முதற்தடவையாக மேற் கொண்டுள்ளது. இதில் குறிப்பாக, பெண் தொழில்முனைவோருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

இத்திட்டம் பனை சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் பெண் தொழில்முனைவோருக்கு நிச்சயமாகக் கைகொடுக்கும்.

பொருத்தமான பயனாளிகள் தெரிவுசெய் யப்பட்டு கடனுதவி வழங்கப்படும். இதன்போது இரண்டு இலட்சம் ரூபா வரை கடனுதவிகளைப் பெறமுடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சித் தேர்தலில் அதிகமான வேட்புமனுக்கள் கண்டியில் நிராகரிப்பு

### மாவட்டத் தேர்தல் அதிகாரி இந்திக்க உடவத்த

**(எம்.ஏ.அமீனுல்லா)**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் நிராகரிப்பு கண்டியில் பதிவாகியுள்ளது - இவ்வாறு மாவட்டத் தேர்தல் அதிகாரி இந்திக்க உடவத்த தெரிவித்துள்ளார்.

இதன்படி கண்டி மாவட்டத்துக்கு 230 குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளபோதிலும், அரசியல் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 210 கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் அவற்றில் 58 நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவிக்கையிலேயே தேர்தல் அதிகாரி இந்திக்க உடவத்த மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

தேர்தல் அதிகாரி அங்கு மேலும் கூறுகையில்:

அங்கீகரிக்கப்பட்ட 52 அரசியல் கட்சிகள் மற்றும் 06 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி நகரசபை மற்றும் மெததும்பர பிரதேச சபைக்கு மட்டும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படவில்லை.

இதன்படி கண்டி மாநகர சபையில் அங்கீகரிக்கப்பட்ட 04 அரசியல் கட்சிகள் மற்றும் 02 சுயேச்சைக் குழுக்களின் 06 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் பன்வில பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட 05 அரசியல் கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சைக் குழுவின் 06 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

வத்துகாமம் நகரசபை, கடுகண்ணாவ நகரசபை, கம்பளை நகரசபை, தும்பனை, ஹாரிஸ்பத்துவ, அக்குரணை, பூஜாபிட்டிய, பாததும்பர, உடதும்பர, மினிபே, குண்டசாலை, பாதஹேவஹெட, கங்கவட்ட கோரலய, யட்டிநுவர, உடுநுவர, உடபலாத்தகங்க, இஹலகோரல மற்றும் பஸ்வாகே கொரல்ல ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு



மனுக்களும் நிராகரிக்கப்பட்டன எனத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி கூறினார்.

கண்டி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 12 இலட்சத்து இரண்டாயிரத்து 558 எனவும் உள்ளூராட்சித் தேர்தலுக்காக 368 வட்டாரங்களில் 937 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருளை எடுத்துச்சென்ற யாத்திரிகர்கள் 14 பேர் கைது

**(எஸ்.கணேசன்)**

சிவனொளிபாதமலை யாத்திரையின்போது போதைப்பொருட்களை எடுத்துச்சென்ற 14 பேர் கைதுசெய்யப்பட்டதாக ஹட்டன் பிரதேச பொலிஸ் கண்காணிப்பாளர் பிரதீப் வீரசேகர தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் ஹஷிஷ், கஞ்சா, கஞ்சா கலந்த மோதக மாத்திரைகள் மற்றும் புகையிலை கலந்த மாவா ஆகியவற்றை வைத்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யாத்திரையின்போது போதைப்பொருள் கொண்டுசென்றவர்களை கைதுசெய்ய நல்லதண்ணி, மஸ்கெலியா, பொல்பிட்டிய, நோட்டன்பிரிட்ஜ், கினிகத்தேனை மற்றும் நோர்வூட் ஆகிய பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இணைந்து கொண்டனர். இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் சந்தேக நபர்கள் 25-40 வயதுக்குட்பட்டவர்களென்றும் அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், அதிகமான ஒளி சாதனங்கள் பொருத்தப்பட்டு சிவனொளிபாதமலை யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பல தனியார் பஸ்களையும் பொலிஸார் சோதனையிட்டனர்.

மேலும், இந்த பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக சாதனங்களை அகற்றி அப்புறப்படுத் துமாறு பஸ் ஓட்டுநர்களுக்கு பொலிஸார் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## குருநாகல் மாவட்டத்தில் 27 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

### தேர்தல் தெரிவத்தாட்சி சந்தன திசாநாயக்க

**(இக்பால் அலி)**

குருநாகல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் 20 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்களின் 07 வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக குருநாகல் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியால் தாக்கல் செய் யப்பட்ட வேட்புமனுக்களில் குருநாகல், பொல் கஹவெல மற்றும் வாரியபொல பிரதேச சபை களுக்கான வேட்புமனுக்களும் ஐக்கிய மக்கள் சக்தியால் தாக்கல்செய்யப்பட்ட பிங்கிரிய பிரதேச சபைக்கான வேட்புமனுவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தாக்கல் செய்த குருநாகல் மாநகர சபை, பிங்கிரிய, பொல்கஹவெல, குளியாபிட்டிய மற்றும் பொல்பித்திகம ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

இதேவேளை, சர்வசன அதிகாரம் கூட்டணி யால் தாக்கல் செய்யப்பட்ட குருநாகல் மாநகர சபை, மாவத்தகம மற்றும் கிரிபாவ உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸால் தாக்கல் செய்யப்பட்ட ரிதிகம, மாவத்தகம, கிரிபாவ மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி யால் தாக்கல் செய்யப்பட்ட குருநாகல் பிரதேச சபைக்கான வேட்புமனுவும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவால் தாக்கல் செய்யப்பட்ட பொல்பித்திகம பிரதேச சபைக்கான வேட்பு மனுவும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட நிக்கவரெட்டிய பிரதேச சபைக்கான வேட்புமனுவும் அருணலு தேசிய முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட குருநாகல் மாநகர சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டன.

அத்துடன், 07 சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. ஆக மொத்தமாக 27 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் 16 இலட்சத்து 30 ஆயிரத்து 286 வாக்காளர்கள் பதிவாகியுள் ளதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 333 வட்டாரங்களில் 1,092 வாக்களிப்பு நிலை யங்கள் இயங்கி வருவதாகவும் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

## மல்லாகம் நீதிமன்றத்துக்குள் யுவதியுடன் சேஷ்டை புரிந்தவர் கைது!

**(பு.கஜிந்தன்)**

மல்லாகம் நீதிமன்றத்துக்குள் யுவதியுடன் சேஷ்டை புரிந்த நபரொருவர் நேற்று முன்தினம் (22) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

மல்லாகம் நீதிமன்றத்தில் கடமை புரியும் 48 வயதுடைய திருமணமாகாத குறித்த நபர் நீதிமன்றத்தில் வேலைசெய்யும் 28 வயது யுவதியுடன் தொடர்ச்சியாக சேட்டையில் ஈடுபட் டுள்ளார்.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத குறித்த யுவதி இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில், குறித்த சந்தேகநபரை விசாரணைக்கு அழைத்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைதுசெய்தனர்.

குற்றம் நிகழ்ந்த இடம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குள் உள்ளடங்குவதால் சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் 85 கிலோ கேரள கஞ்சா மீட்பு!



**(பு.கஜிந்தன்)**

வடமராட்சி - மருதங்கேணி பகுதியில் 85 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

யாழ்ப்பாண இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மருதங்கேணி பொலிஸாருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப் பட்ட சுமார் 85 கிலோகிராம் கேரள கஞ்சா அடங்கிய 40 பொதிகள் நேற்று (23) அதிகாலை ஆழியவளை கடற்கரையில் கைப்பற்றப் பட்டன.

இதன் மதிப்பு அண்ணளவாக 17 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின் றன.

# ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஹெவிவெயிட் ஜாம்பவான் ஜோர்ஜ் ஃபோர்மேன் மரணம்





முன்னாள் ஹெவிவெயிட் குத்துச்சண்டை ஜாம்பவான் ஜோர்ஜ் ஃபோர்மேன் தனது 76ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். குடும்பத்தினருடன் அமைதியாக உறங்கிக்கொண்டே அவர் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

1968 ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற அவர், 1973இல் ஜோ ஃப்ரேசியரை வீழ்த்தி தனது முதல் உலக ஹெவிவெயிட் பட்டத்தை கைப்பற்றினார்.

ஆனால், 1974இல் நிகழ்ந்த ரம்பிள் இன் த ஜங்கிள் என்ற சரித்திரப்புகழ் பெற்ற போட்டியில் முகம்மது அலிக்கு எதிராக தோல்வியடைந்தார்.

1994இல் 45 வயதில் மைக்கேல் மூரரை வீழ்த்தி, உலக சம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றினார். இதன்மூலம், உலகின் வயதான ஹெவிவெயிட் சம்பியனாக புதிய சாதனை படைத்தார்.

பாக்சிங் உலகமே அவரது மறைவுக்கு இரங்கல்களை தெரிவித்துள்ளது. மைக் டைசன், ஜேக் பால், NBA நாயகன் மேஜிக் ஜான்சன் உள்ளிட்ட பிரபலங்கள் அவரை புகழ்ந்தன. முகம்மது அலியின் பேரன் நிக்கோ அலி வால்ஷ் கடைசியாக இருந்த தெய்வீக வீரர்களில் ஒருவர் சென்றுவிட்டார் என்று தெரிவித்தார்.

# ஒலிம்பிக் பேரவையின் முதல் பெண் - ஆபிரிக்காவின் முதல் தலைவர் என்ற சிறப்பைப் பெற்ற கவன்ட்ரி

131 ஆண்டு கால சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் வரலாற்றில் அப்பேரவையின் முதல் பெண் தலைவராக கிறிஸ்டி கவன்ட்ரி தெரிவாகி தனித்துவ சிறப்பைப் பெற்றுள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் (ஐ.ஓ.சி.) தலைவராக 12 ஆண்டுகள் இருந்த தோமஸ் பாச் பதவி விலகுவதையடுத்து சர்வதேச விளையாட்டு அமைப்பில் மிகவும் அதிகாரமிக்க அந்த அரியணையில் அமரப்போவது யார் என்ற கேள்வி எழுந்தது. இதனையடுத்து இந்த தலைவர் பதவிக்கு 07 பேர் போட்டியிட்டனர்.

அவற்றில் முன்னாள் நீச்சல் வீராங்கனையும் சிம்பாப்வே விளையாட்டுத்துறை அமைச்சருமான கிறிஸ்டி கவன்ட்ரி, உலக தடகள சம்மேளனத் தலைவர் செபஸ்டியன் கோ, ஐ.ஓ.சி. நிர்வாகக் குழுவின் உபதலைவர் ஜூவான் ஆன்டோனியா சமராஞ்ச் (ஸ்பெயின்) சர்வதேச சைக்கிளிங் சங்கத் தலைவர் டேவிட் லாப்பரடின்ட், ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கத் தலைவர் மோரினாரி வதானாப், சர்வதேச ஸ்கை மற்றும் ஸ்னோபோர்டு தலைவர் ஜோஹன் எலியாஸ், ஜோர்தான் நாட்டு இளவரசர் பைசல் பின் ஹூசைன் ஆகிய 07 பேர் போட்டியிட்டனர்.

இந்நிலையில் 97 உறுப்பினர்களின் வாக்கெடுப்பில் 49 வாக்குகள் பெற்ற கிறிஸ்டி கவன்ட்ரி புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் ஆபிரிக்காவில் இருந்து இந்தப் பதவியை பெறும் முதல் நபர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.



**IPL - 2025**

**இன்றைய போட்டி**

INDIAN PREMIER LEAGUE

போட்டி இல – 4

டெல்லி vs லக்னோ

விசாகப்பட்டினம் - இரவு 7.30 மணி

# நடப்பு சம்பியன் கொல்கத்தாவை இலகுவாக வீழ்த்திய ஆர்.சி.பி

## முதல் வீரராக கோஹ்லி சாதனை



**கொ**ல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஐ.பி.எல் முதல் ஆட்டத்தில் அரைசதம் விளாசியதன் மூலம் விராட் கோஹ்லி வரலாற்று சாதனை படைத்தார்.

ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல். 2025இன் முதல் போட்டியில், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

முதலில் ஆடிய கொல்கத்தா அணி 174 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணியில் விராட் கோஹ்லி 59 ஓட்டங்களும் பிலிப் சால்ட் 56 ஓட்டங்களும் விளாச, 07 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் கோஹ்லி புதிய வரலாறு படைத்தார். அதாவது, ஐ.பி.எல். வரலாற்றில் நான்கு அணிகளுக்கு எதிராக 1000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை விராட் கோஹ்லி படைத்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக 1,053 ஓட்டங்களும் டெல்லி கேபிட்டல்ஸ் அணிக்கு எதிராக 1,057 ஓட்டங்களும் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக 1,030 ஓட்டங்களும் தற்போது கொல்கத்தா அணிக்கு எதிராக 1,021 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

அதேபோல் மூன்று முறை கிண்ணத்தைக் கைப்பற்றிய அணியான கொல்கத்தா நைட் ரைடர்ஸுக்கு எதிராக 1000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த மூன்றாவது வீரர் கோஹ்லி ஆவார். இதற்கு முன் ரோஹித் சர்மா (1,070), டேவிட் வார்னர் (1,093) மட்டுமே இந்த பெருமையை பெற்றிருந்தனர்.

# சுனில் நரைனுக்கு அவுட் கொடுக்காததன் காரணம் என்ன தெரியுமா?



**ந**டப்பு ஐ.பி.எல். தொடரின் முதல் போட்டியில் சுனில் நரைனுக்கு ஹிட் விக்கெட் கொடுக்கப்படாதது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்.சி.பி. அணியுடனான போட்டியின் கொல்கத்தா அணி பேட்டிங் செய்தபோது அந்த பந்தை எதிர்கொண்ட சுனில் நரைனின் பேட் ஸ்டம்ப் மீது பட்டதில் பெயில்ஸ் கீழே விழுந்துள்ளது. இதனை முதலில் பெங்களூரு அணியினர் கவனிக்காமல் போனாலும், சில வினாடிகள் கழித்து விக்கெட்டுக்கு அப்பீல் செய்தனர். அதனை ரீப்ளேயில் சோதனை செய்த நடுவர்கள் நாட் அவுட் தெரிவித்தனர்.

அதற்கான காரணம் என்னவெனில், சுனில் நரைனின் பேட் ஸ்டம்பில் படுவதற்கு முன்பே நடுவர் வைடு வழங்கிவிட்டார். அத்துடன் பந்து விக்கெட் கீப்பரின் கைக்கு சென்ற பிறகே சுனில் நரைனின் பேட் ஸ்டம்பில் பட்டுள்ளது. இதன் காரணமாக விதிமுறையின் படி இது அவுட் கிடையாது என்பதால் நடுவர் சுனில் நரைனுக்கு அவுட் வழங்கவில்லை.

# விளையாட்டுத் துளிகள்

3ஆவது முறையாக ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு ரூ.200 கோடி பரிசுத் தொகை என பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. இந்தப் பரிசுத் தொகை இந்திய அணி வீரர்கள், பயிற்சியாளர்கள், உதவியாளர்கள், தெரிவுக்குழுத் தலைவர்கள் என அனைவருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு வீரருக்கும் எவ்வளவு என பி.சி.சி.ஐ. குறிப்பிடவில்லை.

★★★★★★★★★★★★★★★

ஐ.பி.எல். போட்டியை காண வரும் ரசிகர்களின் பாதுகாப்புக்காக சென்னை சிங்கம் ஐ.பி.எல். என்ற கியூ ஆர் குறியீட்டை சென்னை பொலிஸார் அறிமுகம் செய்துள்ளனர். போட்டியை காண வரும் ரசிகர்கள் தங்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், இந்த கியூ ஆர் குறியீடு மூலம் பொலிஸாருக்கு தெரிவிக்கலாம். பொலிஸார் உடனடியாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பார்கள் என சென்னை பொலிஸ் தெரிவித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★

நடப்பு ஐ.பி.எல். சீசனின் போட்டிகளுக்கான வர்ணனை தமிழ் உட்பட 12 மொழிகளில் ஒளிபரப்பாகிறது. ஜியோஸ்டாரில் சுமார் 170 வல்லுநர்கள் போட்டிகளை வர்ணனை செய்ய உள்ளனர். தொலைக்காட்சி வர்ணனையை பொறுத்தவரையில் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு மற்றும் கன்னடம் என 05 மொழிகளில் வர்ணனை ஒளிபரப்பாகிறது. டிஜிட்டல் ஸ்ட்ரீமிங்கை பொறுத்தவரையில் ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, ஹரியான்வி, பெங்காலி, போஜ்புரி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி மற்றும் பஞ்சாபி உள்ளிட்ட மொழிகளில் ஸ்ட்ரீம் ஆகிறது.

★★★★★★★★★★★★★★★

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் பல முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில், முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), டேவிட் கோபின் (பெல்ஜியம்) உடன் அதிர்ச்சி தோல்வியடைந்து 2ஆவது சுற்றுடன் வெளியேறினார்.

★★★★★★★★★★★★★★★

நியூஸிலாந்து அணியுடனான 3ஆவது ரி20 ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெறும் 16 ஓவர்களில் 205 ரன்களை சேசிங் செய்து அசத்தியது. இதன்மூலம் சர்வதேச ரி20 கிரிக்கெட் வரலாற்றில் 200க்கும் மேற்பட்ட ரன்களை அதிவேகமாக சேசிங் செய்த அணி என்ற உலக சாதனையை பாகிஸ்தான் படைத்தது. முன்னர் வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக தென்னாபிரிக்க அணி 17.4 ஓவர்களில் 206 ரன்களை சேசிங் செய்திருந்ததே அதிகபட்சமாக இருந்தது.




மாணவர்களின் கல்வி வழிகாட்டியான

ஜூனியர் தமிழன்

மார்ச் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

074 1684643 / 0777 983308

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7